24-12-1986
UNIVERSITY OF SRI LANKA LIBRARY

விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 மார்கழி 14 ர. ஆகிர் 26 இதழ் 318

யாழ்ப்பாணம் திங்கட் கிழமை 29 12 1986

## ஈ. பி. ஆர். எல். எவ். தலைமையகம்

## புதுடில்லிக்கு இடமாற்றம்?

கொழும்பு, ஞாயிறு

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ. பி. ஆர். எல். எவ்) இயக்கம் புதுடில்லிக்கு தனது தலைமையகத்தை இடமாற்றவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

வெளிநாட்டு செய்தி ஸ்தாபனம் ஒன்று இத்தகவலை வெளியிட்டுள்ளது

தமிழ்நாட்டில் சென்னையில் இதுவரை காலமும் ஈ.பி ஆர். எல்.எவ் வின் தலைமையகம் இயங்கிவந்தது.

அண்மைக் காலங்களில் தமிழக அரசு இந்த இயக்கம் மீது மேற்கொண்ட நடவடிக்கைகளையடுத்தும், தமிழீழத்தில் இவ்வியக்கத்துக்கு எதிராகப் பாதகமான சக்திகள் தோன்றியிருப்பதையடுத்துமே புதுடில்லிக்கு இதன் தலைமையகம் இடமாற்றம் செய்யப் படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தனிப்பட்டரீதியிலும் ஈ பி. ஆர். எல் . வ் இயக்கத்துக்கும், தமிழகஅரசுக்குமிடையே கருத்துவேறுபாடுகள் தோன்றியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் முதல இப்புதிய தலைமையகம் இயங்க ஆரம்பிக்குமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ● ஜனவரி முதல் முன்னாள் ராஜதந்திரி

# லக்ஷ்மிநாகநாதன் தலைமையில்

# அரச எதிர்ப்பிரசார ஸ்தாபனம்

### தமிழீழத்தையும் ஊக்குவிக்கும்

(நமது வெளிநாட்டு செய்திச்சேவை)

முன்னாள் ராஜதந்திரி செல்வி லக்ஷ்மிநாகநாதன் தலைமையில் இலங்கை அரசுக்கு எதிரான பிரசார ஸ்தாபனமொன்று எதிர்வரும் ஜனவரி முதல் புதுடில்லியில ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்த ஸ்தாபனம் இலங்கை அரசின் தமிழர் பிரச்னை குறித்த பிரசாரங்களுக்கு எதிராக சர்வதேச பிரசாரங்களை மேற்கொள்வதுடன் 'தமிழீழம்' அமைப்பதற்கான ஊக்குவிப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவிலுள்ள ஈழம் தமிழ் சங்கம் இந்த பிரசார ஸ்தாபனத்தை புதுடில்லியில் இயங்கவைக்கவுள்ளது.

இந்த ஸ்தாபனம் புதுடில்லியில் இயங்கும் அதேவேளை உலகிலுள்ள அனைத்து தமிழீழ ஆதரவு ஸ்தாபனங்களுடனும் இணைந்து செயல்படும் அதுடன் வேறு முக்கிய சர்வதேச ஸ்தாபனங்களுடனும் தொடர்புகொண்டிருக்குமென்று தெரிவிக்கப்பட்டது.

செல்வி லக்ஷ்மி நாகநாதனின் பொறுப்பில இயங்கவுள்ள இந்த ஸ்தாபனத்தில் முன்னாள் தமிழ் ராஜதந்திரிகள் சிலரும் அரசியல் ஆலோசகர்களும் பங்குகொள்கின்றனர்.

இலங்கையில் 'தமிழ் ஈழம்' அமைப்பதற்கான ஊக்குவிப்பு நடவடிக்கைகளிலும் பிரச்சாரங்களிலும் இந்த ஸ்தாபனம்

(11-ம பக்கம் பார்க்க)

### வடபகுதிக்கு

## 2 கோடியே 50 லட்சம்

## பெறுமதியான மருந்துவகை!

கொழும்பு, ஞாயிறு

யாழ்ப்பாண மாவட்ட ஆஸ்பத்திரிகளுக்கு அடுத்த ஆண்டில் சுமார் இரண்டு கோடியே ஐம்பது லட்சம் ரூபாய் பெறுமதியான மருந்து வகைகளை அனுப்பிவைக்கவுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

போக்குவரத்து வசதியின்மை மற்றும் சில வசதியீனங்கள் காரணமாக வடபகுதிக்கு அத்தியாவசிய மருந்துவகைகள் கிடைப்பதில் சிரமங்கள் இருந்து வந்தது தெரிந்ததே. (ரா)

### 'வீடியோ' கமெராக்கள் மூலம்

## 'தலதா' மாளிகை

### பாதுகாப்பு அதிகரிப்பு

கொழும்பு ஞாயிறு

சிங்கள பௌத்தர்களின் மிக முக்கிய வழிபாட்டுத்தலமும், இலங்கையின் முக்கியமான வரலாற்றுச் சின்னமுமான 'தலதா' மாளிகையின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது

இந்த பாரிய கட்டிட விஸ்தீரணத்தின் மூலைமுடுக்கு எல்லாம் மிக அவதானமாகக் கண்காணிக்கும் வகையில் நவீன வீடியோ கமெராக்கள் இத்தலத்தில் பொருத்தப்பட்டுள்ளன

ஆறு சக்தி வாய்ந்த 'வீடியோ' 'கமராக்கள் இக்கண்காணிப்பு வேலைகளுக்கென தலதா மாளிகைக் கட்டிடத்தின் கேந்திரப் பகுதிகளில் பொருத்தப்படும்.

இக் கமராக்கள் படமாக்குவதை இத் தலத்தில் ஒரு மத்திய பகுதியிலுள்ள இடத்திலுள்ள தொலைக்காட்சிப் பெட்டிகள் மூலமாக பாதுகாப்பு அதிகாரிகளால் கண்காணிக்கப்படும்.

ஒரு தனியார் நிறுவனம் இந்த வீடியோ கமெரா கண்காணிப்பு கருவிகளை அன்பளிப்புச் செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## கடத்தப்பட்ட 'வீரகேசரி' அச்சுஇயந்திரம் மீட்கப்பட்டது!

யாழ்ப்பாணம், திங்

வீரகேசரி பத்திரிகைக்கு சொந்தமான அச்சுயந்திரமும் மற்றும் உபகரணங்களும் மீட்கப்பட்டு உரிமையாளர்களிடம் மீண்டும் கையளிக்கப்பட்டுள்ளது

மேற்படி பத்திரிகையை யாழ்ப்பாண பதிப்பாக வெளியிடும் வகையில் இந்த யந்திரமும் மற்றும் உபகரணங்களும் கடந்த வருடத்தில் யாழ்ப்பாணம் கொண்டுவரப்

(12ம் பக்கம் பார்க்க)

### வவனியாவில்

## பஸ் பயணியிடம்

## ரூ. 12 ஆயிரம் பிக்பாக்கெட்!

வவனியா, ஞாயிறு

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்வதற்காக வவனியா சென்ற நடராசா என்பவரிடமிருந்து ரூபா 12 ஆயிரம் 'பிக்பாக்கெட்'டாக அபகரிக்கப்பட்டுள்ளது.

இப்பயணி மட்டக்களப்பில் விளையாட்டு உத்தியோகத்தராகக் கடமையாற்றுகிறார்.

யாழ்ப்பாணத்திலிருந்து வந்த இவர், வவனியா தடைமுகாமில் இறங்கி பரிசோதனைக்குப் பின்னர் மீண்டும் பஸ் ஏறிய போது தமது காற்சட்டைப்

(12ம் பக்கம் பார்க்க)

### கல்லுடைக்கும்

## ஆலைகளை அகற்றுமாறு

## இன்று மறியல்போராட்டம்

யாழ்ப்பாணம், திங்கள்

கோப்பாய் இராச வீதியில் கல்லுடைக்கும் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டதை ஆட்சேபித்து அதனால் பாதிக்கப்படுவோர் இன்று ஒரு நாள் அடையாள வழிமறிப்புப் போராட்டமொன்றை நடத்தவுள்ளனர்.

இச்சம்பவம்பற்றித் தெரிய வருவதாவது:-

குறிப்பிட்ட இந்த இராச வீதியில் எட்டுக் கல்லுடைக்கும் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டன இவைகளை அமைப்பதற்கு ஆட்சேபம் தெரிவித்துப் பொதுமக்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவும் பயனற்றவை

(11-ம் பக்கம் பார்க்க)

### 'கொட்டிவலிகய' நடிகர்

## காமினி பொன்சேகா சுடப்பட்டதாக

## கொழும்பில் நேற்று வதந்தி!

கொழும்பு, திங்கள்

பிரபல சிங்களத்திரைப்பட நடிகர் திரு. காமினிபொன்சேகா சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் என்று கொழும்பில் அனைத்து பத்திரிகை ஸ்தாபனங்களும் முக்கிய பிரமுகர்களும் நேற்றுமாலை ஆறரைமணியளவில் தகவல் கொடுக்கப்பட்டது

தொடர்ந்து கொழும்பில் தொலைபேசி அழைப்புகள் தீவிரமடைந்ததுடன் பாதுகாப்பு வட்டாரங்களும் உண்மையை அறிவதில் உஷாராயிருந்தன.

அமைச்சர்கள், எம்பிக்கள் மற்றும் வர்த்தக பிரமுகர்கள் பத்திரிகை ஸ்தாபனங்களிடம் இது குறித்து வினவுவதும் பத்திரிகையாளர்கள் காமினியுடன் நெருக்கமானவர்களிடம் மேற்படி தகவல்

[11ம் பக்கம் பார்க்க]

### தென் இந்தியாவிலிருந்து

## மன்னார் தமிழ் அகதிகள்

## நாடு திரும்புகின்றனர்!

கொழும்பு, சனி

வன்செயல்களின் விளைவாக இந்தியா சென்றிருந்த மன்னாரைச் சேர்ந்த தமிழ் அகதிகளில் சுமார் 200 பேர்வரையில் நேற்று முன்தினம் நாடு திரும்பியதாகத் தெரியவருகிறது.

(11ம் பக்கம் பார்க்க)

### இன மத பேதமின்றி

## திருமலை அகதிகளுக்கு

## நத்தார் பரிசுகள்!

கொழும்பு, ஞாயிறு

அகதிகளுக்கு நத்தார் வெகுமதிகள் வழங்கும் வைபவமொன்று திருமலையில் இடம் பெற்றுள்ளது கிளசற்பேக், சொட்பே ஆகிய அகதிகள் புனர்வாழ்வு நிலையங்களிலேயே மேற்படி நத்தார் வெகுமதிகள் வழங்கப்பட்டன

மேற்படி வைபவத்தை திருமலை பிரஜைகள் குழு, ரோட்டரிக் கழகம், திருமலை இந்து வாலிபர் சங்கம், சர்வோதய இயக்கம் ஆகிய அரசசார்பற்ற இயக்கங்களே ஒழுங்குசெய்திருந்ததாகத் தெரியவருகிறது. தமிழ், சிங்கள, முஸ்லிம் அகதிகளுக்கு இன, மதபேதமின்றி நத்தார் வெகுமதிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

Suzuki A50 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குள்ளது. விளம்பரதார , பே/பா dyn ads. 476, பிரதான வீதி, சுண்டுக்குளி (சென்ற்ஜோன்ஸ் கல்லூரி முன்பாக)

A 3403

நத்தார் புதுவருட வாழ்த்துக்கள், திருமண அழைப்பிதழ்களும், சகல விலைகளிலுமான முத்திரை வகைகளும் பெற்றுக்கொள்ள அரஸ் ஜவுளி அகம், 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம் தொலைபேசி: 24001. [C6299]

சகலவிதமான அப்பியாசக் கொப்பிகள், பாடசாலை உபகரணங்கள் உள்ளூரில் தயாரிக்கப்பட்டு நியாயவிலையில் விற்பனை செய்யப்படுகின்றன. மற்றைய நிறுவனங்களிலும் பார்க்க வியாபாரிகளுக்கு விசேடகழிவுண்டு தயாரிப்பாளர்களும் விற்பனையாளர்களும் லக்ஷ்மி ஸ்ரோர்ஸ் 644, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (காப்புறுதிக் கூட்டுஸ்தாபனம் முன்). C 6434

தமிழ் ஆங்கில தட்டச்சு இயந்திரம் New Key Bord றெமிங்டன் 26'', 18'' ஆங்கில தட்டச்சு போட்டபிள் Brother, அன்டவூட் பெரிது. தொடர்பு, நிர்வாகி சங்கர், பிறிலியன் அக்கடமி, மகாத்மா வீதி, நெல்லியடி, கரவெட்டி. [C-6523]

தும்பளை வீதிக்கு தெற்குப் புறமாக பணல் ஒழுங்கையில் 3½ பரப்பு வீடு கட்டுவதற்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: க. இரத்தினம், காரைக்கலட்டி, தும்பளை, பருத்தித்துறை.

[C-6370]

தற்போது பாவனையிலுள்ள Frigidaire குளிர்சாதனப் பெட்டி, Transistor றேடியோக்கள், மின்விசிறிகள், சிறிய அலுமாரி விற்பனைக்கு உண்டு. 44, காங்கேசன்துறை வீதி, கொக்குவில். [C-3407]

நல்ல நிலையில் உள்ள பாவித்த மோட்டார் சைக்கிள், ஐஸ்கிறீம் மேக்கர், புதிய கே டி.கே. மேசைக் காற்றாடி, மிக்சர், பெரிய றெஜிபோம் பெட்டி, கசட்றேடியோ, ஜேர்மன் அம்பிளிபையர் விற்பனைக்குண்டு பைலட் சென்ரர், 151, செம்மணி வீதி, நல்லூர். (முத்திரைச்சந்தையிலிருந்து 300 மீற்றர் தூரம்) [C-6604]

## விற்பனைக்கு

புது வைரத் தோடு 12 கல். விலை பலிவு விற்பனைக்குண்டு T. S. Rajah, 43A, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் [C-6595]

சாவகச்சேரி நகர சபையின் 2-ம் வட்டாரம் சிற்றம்பலம் வீதி. மீசாலை தெற்கில் 18 பரப்பு குடியிருப்புக் காணி மாமரம், தென்னை பயிர்கள் கொண்ட மின்சாரவசதியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- க. சோமகலா, முகமாலை எழுதுமட்டுவாள். [C-6570]

## சேவை

135 M. M. கலர் பிலிம் சுருள்கள் எதுவானாலும் Processing and Printing செய்பவர்களுக்கு போஸ்காட் சைஸ் ரூபா 4-75 Proce sing only 20/- விபரங்களுக்கு கொழும்பு ஸ்ருடியோ, யாழ்ப்பாணம். A-3357

குளிர்சாதனப் பெட்டிகள் சீர்அமைக்க மண்ணெண்ணை குளிர்சாதன பெட்டிகளை நவீன முறையில் மாற்றி அமைக்க, ஸ்பிறே வர்ணம் தீட்ட பென்குவின் ஏயர்கொண் என்ஜினியர்ஸ். A B சபாநாதன், and C. கோபாலரத்தினம், 14, மணல்தறை லேன் கந்தர்மடம். C 6516

சகல இன Vedio Deck, Colour Black and White T V. சகல பழுதுகளும் நீண்டகால அனுபவத்துடன் குறித்த தவணையில் மிக நுணுக்கமாக ஆராய்ந்து திருத்திக் கொடுக்கப்படும். விபரங்கட்கு:- Electro Technical Institution, Kalvalai, Sandilipay. [C-6535]

## வகுப்புக்கள்

Radio, T. V. வயறிங், வெல்டிங், பிளம்பிங், மோட்டோர் மெக்கானிசம், தட்டெழுத்து, சுருக்கெழுத்து புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன. சான்றிதழ் பெறுமதியானது தொடர்பு:- Vispa Engineering Hall, 328, நாவலர் வீதி யாழ்ப்பாணம். [C-6502]

ஆண்டு 4, 5, 6, 7, 8, 9 புதிய வகுப்புக்கள் ஆரம்பம் 2-01-1987, மொடேன் எடியுகேசன் சென்ரர், கரவெட்டி [C 6531]

## தேவை

40 வயதிற்கு மேற்பட்ட இரும்பு வேலை - தச்சு வேலை தெரிந்த அனுபவம் வாய்ந்த ஆங்கிலம் தெரிந்த மேற்பார்வையாளர் தேவை. திறமைக்குத்தக்க சம்பளம் வழங்கப்படும். காலை 9 மணிக்கும் மாலை 5 மணிக்குமிடையில் நேரில் வரவும். பெஸ்ரகன் லிமிட்டட், 271, சச்சேரி - நல்லூர் வீதி, நல்லூர். [C-6603]

## பயிற்சி

றேடியோ - ரெலிவிஷன் ரெலெக்ஸ் ஒப்பறேற்ரேஸ் இன்றநஷனல்) (இருபாலாரும்) றேடியோ ஒவ்விசேஸ் (கப்பல்) வெளிநாடுகளில் பிரபல்யமானவை. சான்றிதழ்கள் வழங்கப்படும். ஆரம்பம்: 2-1-1987 எலக்ரோஸ், திருநெல்வேலி சந்தி. C-6561]

## மணப்பந்தல்

யாழ்ப்பாணம் உயர் சைவ வேளாளர் குடும்பத்தைச் சேர்ந்த 5' 0'' உயரமும் 27 வயதுடைய பிரான்சில் நிரந்தர விசாவுடன் உத்தியோகம் பார்க்கும் விடுமுறையில் இலங்கைக்கு வர இருக்கும் மணமகனுக்கு அழகிய நற்குணமுடைய செவ்வாய்க் குற்றமற்ற மணமகள் தேவை. சாதகக் குறிப்பு சீதன விபரங்களோடு விண்ணப்பிக்கவும் விளம்பர இல C 6593 C/o ஈழநாடு யாழ்ப்பாணம். (C6593)

யாழ்ப்பாணம் உயர் றோமன் கத்தோலிக்க வேளாளர் குடும்பத்தைச் சேர்ந்த 31 வயதுடைய பிரான்சில் நிரந்தர விசாவுடன் உத்தியோகம் பார்க்கும் மணமகனுக்கு அழகிய நற்குணமுடைய மணமகள் தேவை சாதகக் குறிப்பு சீதன விபரங்களோடு விண்ணப்பிக்கவும். விளம்பர இல C6594 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (C6 94

## முதலாவது பிறந்ததின வாழ்த்து



செல்வி

ஷோபனா

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த ஸ்ரீஸ்கந்தராஜா சத்தியதேவி தம்பதிகளின் செல்வப் புதல்வி 'ஷோபனா' நாளை 30-12-86 அன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மம்மா மற்றும் உற்றார், உறவினர்கள் ஆகியோர் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

[C6585]

# கொள்ளையர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு கிராமசேவகர் இலக்கானார்

(வவனியா நிருபர்)

வவனியாவில் வேப்பங்குளத்திலுள்ள புளி ஆலம்பகுதியல் நடந்த கொள்ளை முயற்சியொன்றின் போது அவ்விடத்திற்கு விரைந்த கிராமசேவையாளர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்கானார்

இச்சம்பவம் பற்றித்தெரிய வருவதாவது, கடந்த சனிக்கிழமை இரவு 8-30 மணியளவில் வேப்பம் குளம் புளிஆலம் பகுதியிலுள்ள அல்பிரட் என்பவரின் வீட்டிற்குள் துப்பாக்கியுடன் சகிதம் நுழைந்த இனந்தெரியாத கோஷ்டியொன்று கொள்ளையடிக்கும் நோக்குடன் அல்பிரட்டை துப்பாக்கி முனையில் பயமுறுத்தினர்கள்.

துப்பாக்கி நபர்களை கண்டு பீதியடைந்த அல்பிரட் சத்தமிடவே அயலவர் உதவிக்கு சென்றனர்.

தமது முயற்சி தடைப்படவே துப்பாக்கி நபர்கள் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டார்கள்

இச்சம்பவத்தில் கிராம சேவையாளரான து தேவராசா 34 வயது) என்பவர் சாயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வவனியா பகுதியில் தொடர்ந்து நடைபெறும் கொள்ளைச் சம்பவங்களால் இங்குள்ள மக்கள் மத்தியில் பதற்றம் நிலவுகிறது. (ெ)

## நன்றி

எமக்கு இதுவரை அருளியுள்ள சகல நன்மைகளுக்கும் சதா சகாய அன்னைக்கும் புனிதர் யூதாதேயுவுக்கும் எமது சிரம் தாழ்த்திய ஆழ்ந்த நன்றி

[C-6502]

## Investment Opportunity

An established and successful Engineering Concern in Jaffna requires additonal capital to implement its future plans Those who are interested in joining the Company as share-holders are kindly requested to contact us for further information: BUSSINESS PROMOTERS LTD. First floor, 198 (76), Kasturiar Road, Jaffna

(A-3404)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

மரணசாதன நியாயாதிக்கம் } இல.ரீ. 301

மயிலிட்டி தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற பொன்னர் சதாசிவம் என்பவரின் மரணசாதனமற்ற மரணச்சொத்துக்களின் விடயத்தில்

மரணமெய்தியவர்

பொன்னர் சதாசிவம் கைம்பெண் விசாலாட்சி மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பழை.

மனுதார்

எதிராக

1. நடராசா யோகராசாவும்
2. பெண் சகுந்தலாதேவியும்

இருவரும் மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பழை.

எதிர்மனுதார்கள்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்துக்களை நிரூபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடரப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1987ம் ஆண்டு ஜனவரி மாதம் 21ம் திகதி முற்பகல் 8-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1986-ம் ஆண்டு நவம்பர் மாதம் 18-ம் திகதி.

மு யோககுமார்
மனுதாரின் சட்டத்தரணி.

நீதிமன்ற ஆணைப்படி
சிவபாதசுந்தரம்
பதிவாளர்

[C-6522]

## முல்லைத்தீவில் இராணுவம் பலத்த சோதனை

முல்லைத்தீவு, ஞாயிறு

முல்லைத்தீவு பகுதியல் கடந்த புதன் கிழமை சுமார் இரண்டு மணிநேரம் இராணுவம் சோதனை நடாத்தியது. கவச வாகனங்களில் வந்த சுமார் 200 மேற்பட்ட இராணுவத்தினர் வவனியாவிலிருந்துவந்த சகல பிரயாணிகளையும் பஸ்களிலிருந்து இறக்கி பலத்த சோதனைக்குள்ளாக்கினர்

இதனல் முல்லைத்தீவுப் பகுதியில் சிலமணிநேரம் பதட்டமேற்பட்டது. (சி)

## இடமாற்றம்

டண்டத்தாப்பு, புதன்

பண்டத்தரிப்பு தபால் அலுவலகத்தில் உதவித் தபால் அதிபர்களாக கடமையாற்றும் திரு வி. எஸ். சுப்பிரமணியம் புத்தளம் தபால் அலுவலகத்திற்கும் திரு. கே. பாலசுப்பிரமணியம் கொழும்பு தபால் அதிபர் பயிற்சி பாடசாலைக்கும் எதிர்வரும் ஜனவரி மாதம் தொடக்கம் இடமாற்றம்செய்யப்பட்டுள்ளனர். (வா)

## ஊர்காவல் படையில் பலத்த உயிர்ச் சேதம

திருமலை, ஞாயிறு

திருமலை மாவட்டத்தில் ஹேமங்கடவெலவில் ஊர்காவல்படையினரை போராளிகள் தாக்கியதில் ஊர்காவல் படையினர் தரப்பில் பலத்த உயிர்ச் சேதமேற்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இச் சம்பவத்தில் ஊர்காவல் படையினர் அப் குதியிலுள்ள வீடொன்றிலிருந்து போராளிகளைத் தாக்க முற்பட்டபோதே இச் சம்பவம் டம்பெற்றதாக மேலும் தெரிய வருகிறது. (சி)

## வெளியேற்றப்பட்டது

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ் உதைபந்தாட்ட மதியஸ்தர் சங்கம் யாழ் உதைபந்தாட்டச் சங்கத்திலிருந்து வெளியேற்றப்பட்டது அண்மையில் நடைபெற்ற யாழ். உதைபந்தாட்ட லீக்கின் நிர்வாகசபைக் கூட்டத்தில் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இத்தீர்மானம் யாழ் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்திற்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக யாழ். உதைபந்தாட்ட லீக் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ். நகரில் 25 வருடகால சேவையை பூர்த்திசெய்து

### வெள்ளிவிழா காணும் ஸ்தாபனம்?

நாளைய ஈழநாட்டைப் பாருங்கள்

(C-6589)

## ஈட்டு விற்பனவு

இல. ஈடு. 1787

மேற்படி இலக்க விற்பனவு விளம்பர அறிவித்தலின் படி.

அ. ஜெகநாதன்,
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.

16, அம்மன் வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

என்பதை அறியத்தருகிறோம். தவறுதலுக்கு மன்னிக்கவும்.

[A-3405]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணுசக்தி நிலையங்களை பரஸ்பரம் தாக்காமலிருக்கவேண்டும்

இஸ்லாமாபாத் டிச 28

இந்தியாவும் பாகிஸ்தானும் பரஸ்பரம் அணுசக்தி நிலையங்களை தாக்காமலிருக்கவேண்டுமென்ற ஒப்பந்த நகல் பற்றி நேற்று இரு நாட்டு அதிகாரிகளுக்குமிடையில் இஸ்லாமாபாத்தில் நடந்த முதலாவது சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டது.

இந்துமா கடல் நிலவரம் மற்றும் பரஸ்பர நம்பிக்கை ஏற்பாடுகள் பற்றியும் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

இந்தியாவிலிருந்து அதிகளவு தனியார் வியாபாரத்தை அனுமதித்தல் பயணக் கட்டுப்பாடுகளை தளர்த்துதல் குறித்த பேச்சுக்களும் இடம்பெற்றன.

இந்திய வெளியுறவுச் செயலர் திரு. ஏ. பி. வெங்கடேஸ்வரனும் பாகிஸ்தான் வெளியுறவுச் செயலர் திரு. அப்துல் சத்தாரும் உதவியாளர் எவருமின்றி சுமார் ஒரு மணிநேரம் பேச்சுக்கள் நடத்தினார்கள்.

இதேவேளை பாகிஸ்தான் இந்தியாவுடன் நல்லுறவுகளை வளர்த்துக் கொள்ள விரும்புவதாக பாகிஸ்தான் துணை அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார். (ஒ)

உலகச் செய்திகள்

இச் சந்திப்பில் பாகிஸ்தானின் போர்விலக்க உடன்படிக்கை பற்றியும் இந்தியாவின் சமாதான நட்புறவு ஒத்துழைப்பு ஒப்பந்த யோசனை குறித்தும் விவாதிக்கப்பட்டது.

## இணையமைச்சர்கள் தமிழ் அமைப்புக்களை சந்திப்பார்கள்

சென்னை டிச 28

இலங்கை இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு காண்பதற்காக இலங்கை அரசு தெரிவித்துள்ள புதிய யோசனைகள் குறித்து இந்திய இணை அமைச்சர்களான திரு. நட்வார்சிங்கும், திரு. பி. சிதம்பரமும் இலங்கைத் தமிழ் அமைப்புகளைச் சென்னையில் இந்த வாரம் சந்தித்துப் பேச்சு நடத்துவார்கள்.

முதலமைச்சர் திரு எம் ஜி ராமச்சந்திரனுடன் ஆலோசனை நடத்தியபிறகே இந்த அமைப்புகளுடன் இணையமைச்சர்கள் பேச்சு நடத்துவார்கள்.

இரு அமைச்சர்களும்கொழும்பில் இலங்கை அரசுடன் அண்மையில் நடத்திய பேச்சுக்களின் போது இலங்கை அரசு தெரிவித்த புதிய யோசனைகளை இந்தச் சந்திப்பின் போது தமிழ் அமைப்புக்களின் தலைவர்களிடம் தெரிவித்து அவர்களின் கருத்துக்களை அறிவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ)

## ஆப்கானிலிருந்து சோவியத் படைகளை வாபஸ்பெற பிரி. கோரிக்கை

லண்டன் டிச 28

ஆப்கானிஸ்தானிலிருந்து சோவியத் யூனியன் அதன் படைகளை விரைவாகவும் பூரணமாகவும் வாபஸ்பெறவேண்டுமென்று பிரிட்டன் கோரிக்கை விடுத்துள்ளது. பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் சேர் ஜவ்ரி கொவ் விடுத்துள்ள அறிக்கையொன்றில்; சோவியத் யூனியன் ஆப்கானிஸ்தானிலிருந்து தனது படைகளை விரைவாக வாபஸ் பெறுவதை உலகநாடுகள் வரவேற்குமென கூறியுள்ளார்.

ஏழு வருடங்களிற்குமுன்னர் ஓர் நத்தார் தினத்திலேயே சோவியத் படைகள் ஆப்கானிஸ்தானை ஆக்கிரமித்தன ஆப்கானிஸ்தான் அரசுக்கெதிரான முஜஹதீன் என்ற முஸ்லிம் கிளர்ச்சிவாதிகள் அங்கு பல கிளர்ச்சி நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தனர்.

மூன்று வருடங்களுக்கு முன்னர் ஐ நா செயலாளர் நாயகம் ஆப்கானிஸ்தான் சமாதான நடவடிக்கைகளை ஆரம்பித்தார். அவரது அன்றைய முயற்சிக்குஇன்றுபலன் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஆப்கானிஸ்தான் விடயம் தொடர்பான சமரசப்பேச்சுவார்த்தைகளில் சோவியத் அமெரிக்க ஆதரவில் பாகிஸ்தான் ஆப்கானிஸ்தான் ஈரான் ஆகியநாடுகள் பங்குபற்றின.

ஆப்கான் அரசுக்கெதிரான முஜஹதீன் முஸ்லிம் கிளர்ச்சியாளர்கள் ஆப்கானின் அயல் நாடுகளான பாகிஸ்தானிலிருந்தும் எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டபோது ஒரு லட்சத்துப் பதினையாயிரம் சோவியத் துருப்புகள் ஆப்கான் இராணுவ கெரில்லா எதிர்ப்பு நடவடிக்கைகளை தீவிரமாக மேற்கொண்டன,

ஏழாண்டு யுத்தத்தின் காரணமாக இருபதினாயிரம்பேர் உயிரிழந்தனர். பல ஆயிரக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர். (சி)

### ட்ரக் விபத்து 15 பேர் பலி 53 பேர் காயம்

போபால், டிச 28

மத்திய பிரதேசத்தில்நேற்று நடந்த ட்ரக் விபத்தொன்றில் 15 பேர் இறந்துள்ளதுடன் 53 பேர் வரையில் காயமடைந்துள்ளனர்

எண்பதுபேர் பயணம்செய்த இந்த ட்ரக் தடம் புரண்டு கவிழ்ந்ததில் ட்ரக்கின் சாரதி உட்பட 12 பேர் ஸ்தலத்திலேயே மரணமானார்கள். ஏனைய மூவரும் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லும் வழியில் மரணமானார்கள். (ஒ)

## 'ஊர் அப்புக்காத்தின் ஆலோசனை அவருக்கே வினையாக முடிந்தது'

வல்வெட்டித்துறை, ஞாயிறு

காணி வழக்கில் வழக்காளியாக ஏற்பட்ட ஊர் அப்புக்காத்துஒருவர் விசாரணையாளர்களுக்கு ஆலோசனைவழங்க முயன்று அந்தஆலோசனையின் பிரகாரம் தமே குற்றம்சாட்டியசம்பவமொன்று பொலிகண்டி தமிழீழ நீதி மன்றத்தில் நடைபெற்றுள்ளது.

ஏற்கனவே இந்த நபரால் தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றத்தில் கையளிக்கப்பட்ட உறுதிப்பிரகாரம் இந்த நபருக்கு குறிப்பிட்ட நிலத்தில் பங்குஇல்லையென சட்டத்தரணிகளால் நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. இதனை அறியாத அந்தஊர் அப்புக்காத்து இவர் சம்பந்தப்பட்ட இன்னொரு காணி வழக்கில் இன்னொருவரும் தனக்கும் அந்த நிலத்தில் பங்கு இருப்பதாகவும் அதற்குரிய ஆவணங்களைச் சமர்ப்பிப்பதற்கு தனக்குஅவகாசம் வழங்கும்படியும் கோரியிருந்தார். விசாரணையாளர்கள் அவரின் கோரிக்கையை ஏற்று அவகாசம்வழங்கினர்.

இவ்வழக்கிலும் சம்பந்தப்பட்ட அந்த ஊர் அப்புக்காத்து எழுந்து ஐயா இவருக்கு அந்த நிலத்தில் பங்கு இல்லாவிட்டால் இவர் நீதிமன்றத்துக்கு 500 ரூபாசெலுத்த நீங்கள் உத்தரவு வழங்க வேண்டுமென்றார். ஏற்கனவே இவரது முந்திய வழக்கின் முடிவை அறிந்திருந்த விசாரணையாளர்கள் இவரிடமே இதேநிலை உங்களுக்கு ஏற்பட்டால் அதனை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா என வினவிய போது எதனையும் சிந்திக்காத அந்தநபர் ஏற்றுக் கொள்வேன் என உறுதி கூறினார்.

சிலவழக்குகள் விசாரிக்கப்பட்டபின் இவர் அழைக்கப்பட்டு இவரது முந்திய வழக்கில் இவரால் சமர்க்கப்பட்ட உறுதியின் பிரகாரம் உமக்கு அந்த நிலத்தில் பங்கு இல்லையென்பதனால் நீர் கேட்டுக் கொண்டபடியே பொய்யான உறுதி நீதிமன்றத்தில் சமர்ப்பித்த நீதிமன்றை [illegible] த்ததற்காகவும் உமக்குச் சம்பந்தமில்லாதவழக்கில் விசாரணையாளரா கமாற முயன்ற குற்றத்திற்காகவும் நீர் குறிப்பிட்ட 00 ரூபா குற்றத்தை நீரே நீதிமன்றத்தில் செலுத்தவேண்டும் என பணிக்கப்பட்டது.

தனது அதிப் பிரசங்கித்தனத்துக்காக அவர் இயன்ற வரை மன்னிப்பு கேட்ட பொழுதிலும்மன்னிப்புவழங்க மறுத்த விசாரணையாளர் ஒருவர் மனமிரங்கி இப்படிப் போன்றோருக்கு இதுபாடமாகவும் எச்சரிக்கையாகவும் இருக்கவேண்டும்என்பதற்காக குறைந்தபட்சமாக 300 ரூபா அபராதம் விதித்து கடுமையாக எச்சரித்தும் அனுப்பப்பட்டார். (க)

### மின்இணைப்பு வழங்கப்படவில்லை

யாழ்ப்பாணம், திங்கள்

வட்டுக்கோட்டை மற்கு பெருவளவு வீதியில் மின்சாரக் கம்பங்கள் [illegible] முதல் அப்பகுதிக்கு இதுவரையும் மின்சார இணைப்பு வழங்கப்படவில்லை.

## அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர்தான் கிருமிநாசினி விற்கலாம்

கொழும்பு ஞாயிறு

கிருமிநாசினிகளை அங்கீகாரம்பெற்ற விற்பனையாளர்களே இனிவிற்பனை செய்ய முடியும்

விவசாயத் திணைக்களம் சிபார்சு செய்துள்ள பல கிருமிநாசினிகள் கட்டுப்படுத்தப்பட்ட கிருமிநாசினி வகைகளுள் அடங்குகின்றன. இவற்றைவிற்பனை செய்யஅனுமதிபெறவிரும்புபவர்கள் மாவட்ட விவசாய விஸ்தரிப்பு உதவிப் பணிப்பாளருடன் தொடர்பு கொள்ளவேண்டுமென்று கேட்கப்பட்டுள்ளனர்.

இத்தகையகட்டுப்பாட்டுக்கு அடங்கி நடக்காதவர்கள் கிருமிநாசினி கட்டுப்பாட்டுச் சட்டத்திற்கமைய குற்றம் புரிந்தவர்களாகக் கருதப்படுவார்கள். (வா)

## ஏழைச்சிறுவரின் கல்வியில் அக்கறை செலுத்தவேண்டும்

சாவகச்சேரி, ஞாயிறு

"பின்தங்கிய கிராமங்களில் வாழ்கின்ற ஏழைச் சிறுவர்களின் கல்வி வளர்ச்சியில் எம்மத்தியில் இருக்கின்ற கல்வியாளர்களும், ஸ்தாபனங்களும் கூடிய கவனத்தையும் ஆர்வமும் செலுத்தவேண்டியது மிகவும் முக்கியபணிகளில் ஒன்றாகும்."

இவ்வாறு காரைநகர் பிட்டிவளை கிராமத்தில் நடைபெற்ற அறவழி பாலர்பாடசாலையின் விளையாட்டுப் போட்டியின்போது பிரதம விருந்தினராகப் பங்குகொண்ட அராலி இந்துக்கல்லூரியின் உபஅதிபர் திரு தோமஸ் டானியல் உரையாற்றும்போது தெரிவித்தார்.

அம்பாள் சனசமூக நிலையத் தலைவர் திரு. இ பேரம்பலம் தலைமையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியின் போது அறவழிப் போராட்டக்குழுவின் இயக்குனர்கள் வி எஸ். துரைராஜா, எஸ். தம்பிராசா செயலாளர் திரு க. ஜீவகதாஸ், சர்வதேச சமாதான சேவை இயக்கத்தைச்சேர்ந்த திரு. சண். காளிதாஸ் ஆகியோரும் சிறப்புவிருந்தினராகப் பங்கு கொண்டனர்.

போட்டியில் வெற்றிபெற்ற வீரர்களுக்கான பரிசில்களைப் பிரதமவிருந்தினர் திரு. ரீ. டானியல்வழங்கினார். (ஒ)

## மீன்பிடிக்கச் சென்றவர்கள் கடலில் தூக்கிஎறியப்பட்டனர்

சுன்னாகம், ஞாயிறு

சேந்தாங்குளத்திற்கு அண்மையில் உள்ள குசுமன்துறையில் இருந்து படகில் மீன்பிடிக்கச் சென்றவரின் இயந்திரம் கடற்படையினரால் பறிமுதல்செய்யப்பட்டதுடன் படகில் சென்றோரையும் கடலில் தட்டிப்போட்டனர்.

படகில் மீன்பிடிக்கச்சென்ற எஸ் தப்பிமுத்து (வயது 40) அவரின் சகோதரர்கள் இருவர் நேற்றுமுன்தினம் கடற்படையினரால் கடலில் இடைமறிக்கப்பட்டு இயந்திரத்தை கழற்றிய பின் கடுமையாக எச்சரிக்கப்பட்ட பின் படகில் இருந்த இருவரை கடலில் தூக்கி எறிந்துவிட்டு மற்றையவரைப் பார்த்து இனிமேல் கடலில் மீன்பிடிக்க வரக்கூடாது என்று கடற்படையினர் எச்சரிக்கை செய்தனராம். [வா]

### 3லட்சம் ரூபா செலவில் மருந்துக் களஞ்சியம்

சுன்னாகம், ஞாயிறு

தெல்லிப்பழை அமெரிக்கன் மிஷன் வைத்தியசாலையில் 3 லட்சம் ரூபா பணத்தில் இருமாடி மருந்துக்களஞ்சியம் அமைக்கப்படுகிறது.

பரவலாக்கப்படுத்தப்பட்டவரவுசெலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் இருந்து இந்த மருந்துக்களஞ்சியம் கட்டப்பட்டு வருகிறது,

வைத்தியசாலையில் மருந்து பாதுகாப்பாக வைக்க இடம் இல்லாது இருந்து வந்த கஷ்ட நிலை இக் கட்டடம் மூலம் தீர்த்துவைக்கப்படுகிறது

காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபனத்தினர் இக் கட்டிடத்தை ஒப்பந்த அடிப்படையில் 4 மாத காலத்துக்குள் கட்டித் தருவதாக உறுதி அளித்துள்ளார்கள்,

### சமூக அபிவிருத்தி சபை அறிவிப்பு

யாழ்ப்பாணம், திங்கள்

சமூக அபிவிருத்திச் சபையால நிர்வகிக்கப்பட்டு வந்த இரு ஆஸ்பத்திரிகள் முதாம் ஆம் மேற்படி சபையால் கைவிடப்பட்டுள்ளதாக சமூக அபிவிருத்திச்சபை அறிவித்துள்ளது

ஆஸ்பத்திரிகள் நலன்சருத சபையால் வழங்கப்பட்ட இடையாள அடையாளங்களையும் கடிதங்களையும் வாபஸ் பெறுவதாகவும் சமூக அபிவிருத்திச்சபை தெரிவித்துள்ளது (ஒ)

### கால் நடை வளர்ப்போர் சங்கம்

யாழ்ப்பாணம், திங்

சங்கானை கால்நடை வளர்ப்போர் சங்க அங்குராப்பணக் கூட்டம் மிருக வைத்திய அதிகாரி திருமதி ச செல்லத்துரை தலைமையில் சங்கானை மிருக வைத்தியர் அலுவலகத்தில் நடைபெற்றபோது பின் வருவோர் நிர்வாகசபை உறுப்பினர்களாக தெரிவுசெய்யப்பட்டனர்

தலைவர்: சு. தர்மசீலன், உபதலைவர்: ந. நற்குணசிங்கம், செயலாளர்: திருமதி. ச. செல்லத்துரை, பொருளாளர்: செ. மாணிக்கவாசகர் உட்பட எட்டுப்பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது. (ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

நாம் யாரிடம் பழகினாலும் அவரிடத்தில் காணப்படும் நற்பண்புகளை எடுத்துக்கொள்ள வேண்டும். கெட்டவற்றை விலக்கிவிடவேண்டும்.

—கன்பூஷியஸ்

# நமது நோக்கு

## நிபந்தனைகளை நிறைவேற்றுவார்களா?

"புலி"களைப் பற்றி புரிந்துகொண்டனர்" என்பது நேற்று யாழ்ப்பாணத்தில் வெளியான ஒரு செய்தித் தலைப்பு.

'புலிகள்' என்ற அடைமொழி சிங்கள மக்கள் மத்தியில் தமிழ் இளைஞர்களையே குறிக்கும். சில சமயங்களில் தமிழ் மக்கள் அனைவரையுமே 'புலிகள்' என்று குறிப்பிடும் புண்ணியவான்களும் உண்டு.

இராணுவ சிப்பாய்களைப் பொறுத்தவரை தமிழர்கள் இளைஞர்கள், முதியவர், பெண்கள், சிறுவர்கள் என்ற பாகுபாடு கிடையாது அனைவருமே 'புலிகள்' தான் அவர்களுக்கு.

அவர்களைக் குற்றஞ் சொல்லிப் பயனில்லை. நாட்டு அரசின் உத்தரவுகளுக்குப் பணிந்து வடக்குக் கிழக்கில் முகாமிட்டுள்ள அவர்கள் எந்நேரமும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டிருப்பவர்கள். சிறு சலசலப்பு என்றுமே அதிர்ச்சியுற்று துப்பாக்கிகளை இயக்கி கண்ணில்பட்டவர்களைச் சுட்டுத்தள்ளிவிடுகிறார்கள் சுடுபட்டவர்கள் எல்லோருமே 'புலிகள்' என நாமம் சூட்டப்பட்டுவிடுகிறார்கள்.

இம்மாதிரியான சூழ்நிலையில்தான் கடந்தசில வாரங்களில் ஒரு புது மாற்றத்தை இங்குள்ள மக்கள் கண்டும் உணர்ந்தும் வருகிறார்கள் அடம்பனில் நடந்த உக்கிரமான ஒரு போரையடுத்து அங்கு கைப்பற்றப்பட்ட ராணுவச் சிப்பாய்கள் 9 பேரின் சடலங்களை போராளிகள் திருப்பிக் கொடுத்ததும் உயிருடன் பிடிபட்ட இரு சிப்பாய்களை விடுவிப்பதற்காக தென்னிலங்கை அரசியல்வாதியொருவர் இருதடவைகள் இங்குவந்து சென்றதும் இராணுமட்டத்தில்சந்திப்புகள் நிகழ்ந்ததும் இரகசிய ஏற்பாடொன்றையடுத்து சிப்பாய்கள் இருவரும் இருபோராளிகளுக்கு பதிலாக விடுக்கப்பட்டதும் மேற்கூறிய சம்பவங்களில் சிலவாகும்.

இதையடுத்து அரசாங்கத்தரப்பைச்சேர்ந்த எட்டியாந்தோட்டை பாராளுமன்ற உறுப்பினர் திரு. வின்சன் பெரேரா தலைமையில் குழுவொன்று இங்கு வந்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் யாழ்ப்பாண மாவட்ட பொறுப்பாளர் தளபதி கிட்டுவின் தலைமையிலான குழுவுடன் இரண்டு மணி நேரம் பேச்சுக்கள் நடத்திவிட்டுத் திரும்பிச்சென்றுள்ளது.

இந்த அளவில் தமிழ் இளைஞர்கள் சிங்கள மக்களுக்கோ சிங்கள தேசத்துக்கோ ஏன் சிங்கள இராணுவத்துக்கும் கூட எதிரானவர்கள் அல்லர், தமிழ் மக்களையும், தமிழ் மண்ணையும் நேசிப்பவர்கள் அதற்காக எதிர்விளைவுகளைப் பற்றி எண்ணாது உயிரைத் துச்சமென மதித்துப் போராடுபவர்கள் என்பதை போராளிகள் உணர்த்தியுள்ளார்கள் என நாம் புரிந்து கொள்ளலாம்

இவ்வாறு உருவாகியுள்ள ஒரு சுமுகமான சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு இலங்கை அரசாங்கம் நேரடியாகப் பேச்சுவார்த்தைகளைத் தொடர்வதற்கு வழிகளைத்தேட முற்படுவது இயற்கை.

எந்த ஒரு பிரச்னையும் இறுதியில் பேச்சுவார்த்தையின் மூலமே தீர்க்கப்படும் என்பது நியதி. ஆனால் கடந்த 1983ம் ஆண்டு தொடக்கம் இந்திய அரசு இந்த விடயத்தில் மிகுந்த அக்கறையுடன் மேற்கொண்டுவந்துள்ள சமரச முயற்சிகள் ஓரளவுக்காகிலும் பயன்தரக்கூடிய விதத்தில் முன்னேற்றங்கள் தென்படும்தறுவாயில் அந்த முயற்சியை அப்படியே கைவிட்டு புதிய பேச்சுக்களை அரசு நடத்த முயற்சிக்குமானால் அதில் தமிழர் சார்பில் சந்தேகம் ஏற்படுவதில் நியாயமுண்டு.

எனவேதான் "இனப்பிரச்னை தீர்வுக்கான எந்த முடிவும் இந்தியாவின் மத்தியஸ்தம் மூலமே எடுக்கப்படவேண்டும்" என்ற கருத்து திரு. வின்சன் பெரேரா குழுவினரிடம் தமிழீழ விடுதலைப்புலிகளின் சார்பில் அடித்துக்கூறப்பட்டுள்ளது.

பேச்சுக்கள், வாக்குறுதிகள், ஒப்பந்தங்கள் என்ற ரீதியில் மூத்ததலைமுறையினர் கடந்தகாலங்களில் ஏமாற்றப்பட்டு விட்டதை இன்றைய இளைஞர் தலைமுறை இலகுவில் மறந்துவிட முடியாது. அவர்களுக்குப்பின்னரும் இன்னும் எத்தனையோ தலைமுறையினர் தலையெடுக்கவிருக்கிறார்கள்.

எனவே நேரடிப்பேச்சுவார்த்தைகளை வரவேற்ற போதிலும், இனப்பிரச்னைக்கான தீர்வு இந்தியா போன்ற ஒரு பெரியநாட்டின் மத்தியஸ்தம் மூலமாக ஏற்படுவதையே தமிழ் மக்கள் விரும்புவார்கள் அப்படியான ஒருதீர்வு ஏற்படும் போது இந்த நாட்டில் வாழும் சகல மக்களும் அதனை ஏற்றுக்கொள்ளும் விதத்தில் நிலைமைகள் உருவாக்கப்படுவது அவசியம்.

அதற்காக அரசு சார்ந்த சமரசக்குழுக்கள் தமிழ்ப் பகுதிகளுக்கு வருவதும் பேச்சுவார்த்தைகள் நடத்துவதும் அவசியமாக இருக்கலாம். அதுவுங்கூட இதுவரைகாலமும் மேற்கொள்ளப்பட்டுவந்துள்ள பகைமையான போக்கு பலவழிகளிலும் தளர்த்தப்பட்ட பின்னரே சாத்தியமாகும் என்பது பேச்சுவார்த்தைகளின்போது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அந்தவகையில் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ள அப்பாவித் தமிழ் மக்கள் அனைவரையும் விடுதலை செய்வதும், தமிழ்ப் பிரதேசங்களில் அமுல்நடத்தப்படும் கடல்வலய சட்டங்களை நீக்குவதும் உடனடியாக அரசு மேற்கொள்ளவேண்டியநடவடிக்கைகளாகும்.

தமிழ்மக்களின் பிரச்னைகளை நேசபான்மையுடன் தீர்த்துக்கொள்ள அரசு விரும்புகின்றது என்பதை இது எடுத்துக்காட்டுவதாக மட்டுமல்ல 'புலிகளின்' நிலையை உண்மையாகவே புரிந்து கொண்டதாகவும் அமையும்.

# "கோரிக்கை விடுக்கவில்லை நிபந்தனைகளே விதித்துள்ளோம்"

## அரச குழுவுடன் நடத்திய பேச்சுக்கள் பற்றி தளபதி கிட்டு

நிழல் தரும் மரங்கள் அடர்ந்த வளர்ந்து நிற்றன. அந்தச் சோலையில் புலிகளின் புதிய முகாம் அமைந்திருந்தது. வரிசையாக நிற்கும் இளம் தென்னைகளின் நடுவே அழகானமாடி வீடு. அருகில் தகரக்கொட்டகை. அங்கு பொதுமக்களின் புகார்களை; முறைப்பாடுகளை போராளி ஒருவர் விபரமாக பதிவுசெய்து கொண்டிருந்தார். குடாநாட்டின் பல பகுதிகளிலிருந்தும் இப்படித்தான் தினமும் பலர் தங்கள் பிரச்னைக்கு தீர்வுகாண அம்முகாமைத்தேடி வருகிறார்கள், அன்றும் ஏழெட்டுப்பேர் காத்திருந்தனர் சில தாய்மார்களும் வந்திருந்தனர். ஒருபக்கத்தில் ஆறேழு மோட்டார் சைக்கிள்கள் அருகில் சில வான்கள் ஒன்றை கவனித்தேன். அதில் இலக்கம் இருக்கவில்லை த.ஈ.வி.பு என எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்தன.

யாழ். நகருக்கருகில் அமைந்துள்ள இம்முகாமிற்கு தளபதி கிட்டுவை பேட்டிகாண சென்றிருந்தோம். எட்டியாந்தோட்டை எம். பி. திரு. வின்சன் பெரேராவின் நல்லெண்ண குழுவைவழியனுப்பிவிட்டு பிற்பகல் 2 மணிக்கு தளபதி கிட்டு வந்திருந்தார். வந்த கையோடு பத்திரிகையாளருக்கு பேட்டிதரச் சம்மதித்தார்.

அந்த மாடிவீட்டுக்குள் செல்கிறோம். உள்ளே சென்றதும் புலிகள் தலைவர் பிரபாகரனின் பெரிய படம் ஒன்று எதிர்ப்படுகிறது நடுஹோலில் அழகிய வர்ண மீன் தொட்டி அதற்குள் அழகான சிறிய மீன்கள் அருகிலே நவீன ரக துப்பாக்கிகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அப்பொழுதுதான் காங்கேசன்துறையிலிருந்து திரும்பிய அணி வாகனத்தில் இணைத்து சென்ற துப்பாக்கிகளை அடுக்கி அங்கு அடுக்கி வைத்திருந்தனர்.

முன்ஹோலில் ஒரு மேசை அதில் நான்கைந்து தொலைபேசிகள் அடிக்கடி ஹோலில் வந்து கொண்டிருந்தது. நாங்கள் அங்குள்ள கதிரைகளில் அமர்ந்திருந்தோம் சில நிமிடத்தில் தளபதி கிட்டு வந்து அமர்ந்தார்.

முதலில் நல்லெண்ண குழுவினரை சுருக்கமாக ஆனால் விளக்கமாக எடுத்து கூறினார்.

### ஒரு முன்னேற்றம்

எதனைப்பற்றி பேசினீர்கள்? என்று பேட்டியை ஆரம்பித்தேன்

தமிழ்ஈழம்பற்றியோ அல்லது மாகாண சபைகள் எதுபற்றியோமோ நாங்கள் பேச்சு நடத்தவில்லை, இங்குள்ள நிலைமைகளைப்பற்றி எடுத்து கூறினோம்.

இந்த நல்லெண்ண குழுவின் விஜயம் எதனை எடுத்து காட்டுகிறது?

முன்பு விஜயகுமாரணதுங்கா ஒரு கட்சியின் தலைவர் என்ற முறையில் வந்து எம்மை சந்தித்தார். இப்போது அரசாங்க எம் பி. ஒருவர் வந்து சந்தித்துள்ளார். இது ஒரு முன்னேற்றமாகும்.

இந்நிலைமை ஏன் ஏற்பட்டது!

விஜயகுமாரணதுங்கா இங்கு வந்துசென்ற பின் சிங்கள மக்கள் மத்தியில் ஒரு மாற்றம் ஏற்பட்டு வருகிறது. இங்குள்ள உண்மை நிலைமைகளை அவர்கள் புரிந்து வருகிறார்கள் என்பதை காட்டுகிறது

உங்கள் நிலைமை என்ன?

தமிழ் ஈழத்தை தவிர வேறு எந்த அரைகுறை தீர்வையும் ஏற்றுக்கொள்ள தயாராக இல்லை.

நல்லெண்ண குழுவினரை யாழ்நகர் வருமாறு நீங்கள் அழைக்கவில்லையா?

### கா. யோகநாதன்

யாழ்நகர் வருமாறு கேட்டோம் அவர்கள் பாதுகாப்பு கருதியோ என்னவோ சம்மதிக்கவில்லை பின் காங்கேசன் துறையிலுள்ள தனியார் வீட்டில சந்திக்க விரும்பினார்கள். அதற்கு நாங்கள் சம்மதிக்கவில்லை. பின்னர்தான் உப அலுவலகத்தில் சந்திக்க முடிவாகியது.

### நிபந்தனைகள்

இக்குழுவினரிடம் ஏதாவது கோரிக்கை விடுத்தீர்களா?

கோரிக்கையல்ல, அதனை நிபந்தனை என்றே கூறவேண்டும். அரசுடன் நேரடியாக பேச சிறையிலும் முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அப்பாவி பொதுமக்களை இளைஞர்களை உடன் விடுதலை செய்ய வேண்டும் என்று தெரிவித்தோம்.

இதற்கு அவர்கள் என்ன சொன்னார்கள்?

அவர்கள் எதுவும் சொல்லவில்லை'

இந்தநிபந்தனைபற்றி அவர்களின் நிலைப்பாடு எப்படியிருந்தது?

"அதனை ஏற்றுக்கொண்டனர்; ஆனால் எதுவும் சொல்லவில்லை

வேறு முக்கிய விஷயம் ஏதாவது பேச்சில் இடம்பெற்றதா?

மலையக தமிழர், முஸ்லிம்கள், கிழக்குமாகாண தமிழர் பிரச்னைகள் முதலில் தீர்க்கப் படவேண்டும் என்று தெரிவித்தோம்.

வேறு என்ன தெரிவித்தீர்கள்?

இந்தியாவின் மத்தியஸ்தத்தின் ஊடாகவே தமிழர்பிரச்னையை தீர்க்கவிரும்புகிறோம் என்பதை வலியுறுத்திச்சொன்னோம்.

வேறு?

கடல்வலயச்சட்டத்தை நீக்கவேண்டும் தற்போதைக்கு அது முடியாதுபோனால் பீன்பிடிக்கும் பிராந்தியதூரத்தை அதிகரிக்குமாறு கேட்டோம். மற்றும்மக்களைபாதிக்கும் சட்டங்களை திருத்துமாறு கேட்டோம் இந்த நிபந்தனைகள் ஏற்பப்படடால் தான்நேரடி பேச்சு.

சிறைகளிலும் இராணுவ முகாம்களிலும் எத்தனைபேர் தடுத்துவைக்கப் பட்டுள்ளார்கள் என்று கேட்டபோது, 3000 முதல் 4000 அப்பாவிமக்கள் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக கூறினார்.

கப்டன் கொத்தலாவலையை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

அவர் எங்கள் எதிரிதான் ஆனால் ஒரு 'ஜென்டில்மன்' என்றார்.

"நல்லெண்ண தூதுக்குழு விஜயத்தைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

முன்பு குமாரணதுங்கா இங்குவந்து சென்ற பின்னர் சிங்களமக்கள் இங்குள்ள உண்மைநிலையை புரிந்து கொண்டு வருகிறார்கள் இக்குழுவினரும் நிலைமையை அறிந்திருப்பார்கள். உண்மையான நல்லெண்ண விஜயத்தை நாம் ஏற்றுக் கொள்வோம். யார்வந்தாலும் சந்திப்போம்' என்றார்.

### பிரகடனம்

87 ஜனவரி முதல் தமிழ்ஈழ பிரகடனம் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறதே?

அதுதவறான தகவல் அப்படியல்ல எல்லா இலாகாக்களையும் சேர்த்து ஒரு செயலகம் முதல்த் தேதி அமைக்கப்படவிருக்கின்றது. கச்சேரி மாதிரி ஓரிடத்தில் இது அமையும். வாகன, வானொலி, தொலைக்காட்சி என்பவற்றின் வரிகளை அறவிடப் போகின்றோம் அதனுடன் போக்குவரத்து பொலிஸ் சேவையும் ஆரம்பமாகும், முத்திரை ஒன்றும் வெளியிடுவோம், இப்படியான மாற்றங்களைத்தான் செய்யவிருக்கின்றோம்;

### நிதர்சனம் தொலைக்காட்சி

வேறு என்ன மாற்றங்கள்? தற்போது புலிகளின் பரீட்சார்த்த தொலைக்காட்சி சேவை நிதர்சனம் என்னும் பெயருடன் ஜனவரி முதல் செயல்படும். அதாவது உண்மை என்ற அர்த்தம்.

தற்போது எத்தனை இடங்களில் இந்த தொலைக்காட்சி சேவை நடைபெறுகின்றது?

யாழ்ப்பாணம், தெல்லிப்பழை, வட்டுக்கோட்டை, வல்வெட்டித்துறை ஆகிய நான்கு நான்கு இடங்களில் செயல்படுகின்றது. சாவச்சேரியில் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை.

எத்தனை மைல் சுற்றுடலுக்கு இச்சேவை ஒளிபரப்பாகும்?

சுமார் 20 மைல் சுற்றுடலுக்குத் தெரியும்.

### சர்வோதயக்குழு வருமா?

சர்வோதயக் குழுவினர் இங்கு வருவார்களா?

அவர்கள் தொடர்பு கொண்டு வர விருப்பம் என தெரிவித்துள்ளனர்

அவர்களிடம் முக்கியமாக எதனை வலியுறுத்துவீர்கள்?

வடக்குக் கிழக்கு மாகாணத்திற்காகவே பெருமளவுநிதிகள் சர்வோதயத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது ஆனால் வடக்குக் கிழக்கில் இது செலவிடப்படுவதில்லை, சிங்களப் பகுதியிலதான் செலவிடப் படுகின்றது வடக்குக் கிழக்கில் இந்த சர்வோதய இயக்கம் செயல்பட்டால்தான் அதற்கு நிதி கிடைக்கும் இந்நிலையில் வடக்குக் கிழக்கில் செயல்பட வண்டுமானால் 50 வீதமான நிதி வடக்குக் கிழக்கில் செலவிடப்பட வேண்டும் என நிபந்தனையை விதிக்கப் போகின்றோம்.

எட்டியாந்தோட்டை எம். பி. தலைமையில் வந்த குழுவினர் வேறுஎதனை கேட்டார்கள்.

இங்குள்ள நிலைமைகளைப் பற்றி கேட்டறிந்து கொண்டார்கள். விளக்கமாகச்சொன்னோம்

சுமார் ஒருமணிநேரம் எங்களுடன் செலவிட்ட தளபதி கிட்டு விடமிருந்து விடைபெற்றபோது அவரும் மற்றும் புலிகள்பிரதிநிதிகளும் எங்களை வாசல்வரைவந்து வழியனுப்பி வைத்தார்கள், (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 75 - வது வயதில்
# அதிவண டாக்டர் ஷெய்ட்ஞ மொஹமட் புர்ஹானுதீன் சாகிப் [T. U. S.]
## 'ஒரு புனித பரம்பரையின் புதிய அத்தியாயம்'

உலகின் மிகச்சில புனித மகான்களின் வழித்தோன்றல்களில் ஒருவராகவே அதிவணக்கத்திற்குரிய டாக்டர் ஷெய்ட்ஞ மெஹமட் புர்ஹானுதீன் சாகிப் (T U S) அவர்கள் விளங்குகின்றார்கள்.

இந்திய உபகண்டத்தில் பெரும்பான்மையாகவும், தென்காசியா, தூரகிழக்கு, மேற்கு-கிழக்கு ஆபிரிக்கா மற்றும் ஐரோப்பா உட்பட உலகில் சுமார் பத்து லட்சம் போரா முஸ்லிம் சமூகத்தவர் வாழ்ந்து வருகின்றார்கள்.

இச் சமூகத்தவரின் வழிகாட்டியாகவும், இவர்களின தனித்துவத்தையும், மத நம்பிக்கைகளையும் பிரதிபலிக்கும் ஒரு சின்னமாகவும் டாய்-எல்-முற்லக் (Dai - el - Mutlaq) என்ற புதிய பதவியைத் தாங்கி டாக்டர் ஷெய்ட்ஞ மொஹமட் புர்ஹானுதீன் இருந்துவருகின்றார்.

இப்புனிதர் கடந்த வாரம் 21-12 86) தமது 75-வது வயதைப் பூர்த்தி செய்துள்ள இவ் வேளை, இவரது தெய்வீகப் பணிகள் தொடர 'போரா' சமூகத்தவர் இவரை வாழ்த்தி பெருமிதமடைந்து நிற்கின்றனர்.

### டாய்-எல்-முற்லக்

டாய்-எல்-முற்லக், இமாமின் ஏகபிரதிநிதியாக இருந்து 'டாவத்' [Dawat] என்ற புனிதபணியைப்புரிந்து வருகின்றார் இப்பணி மூலம் இமாம் உலகில் வாழ்ந்து, சில சமயங்களில் ஏகாந்தமாகவும் இருந்து வருகிறார் என்பது போரா'க்களின் நம்பிக்கையாகும்.

'போரா' சமூகத்தவரின் மத நம்பிக்கைகளில் டாய்-எல்-முற்லக் மிகவும் முக்கியமானவராகக் காணப்படுகின்றார்.

இவரது மத நிர்வாகத்தின் மகத்துவமும், புனித கைங்கரியங்களில் இவர் கொண்டுள்ள நம்பிக்கையையும் போரா சமூகத்தை ஒன்றிணைத்து வைத்துள்ளது. ஒழுக்கத்தை வலியுறுத்தி இச் சமூகத்தவரை ஒரு உறுதிமிக்க அமைப்பாக வைத்திருக்கும் டாய்-எல்-முற்லக், சகோதரத்துவத்தைப் பேணி வருகின்றார்.





அதிவணக்கத்துக்குரிய டாக்டர் ஷெய்ட்ஞ மொஹமட் புர்ஹானுதீன் சாகிப் [T. U. S.] டாய்-எல்-முற்லக் நிர்வாகத்தின் 52-வது பிரதிநிதியாக விளங்குகின்றார்.

### நீண்ட பரம்பரை

ஒழுங்கு தவறாக சங்கிலித் தொடராக 850ஆண்டுகளுக்கு மேல் டாய்-எல்-முற்லக் பரம்பரை நீடித்துவருகின்றது.

52-வது டாய்-எல்-முற்லக் என்ற ரீதியில் பாத்தெமி [Fatemi] பாரம்பரியத்தின் காவலராகவும் டாக்டர் ஷெய்ட்ஞ மொஹமட் புர்ஹானுதீன் விளங்குகின்றார்.

விஞ்ஞானம், கலை, தத்துவம், கட்டிடக்கலை, வான சாஸ்திரம், கணிதம், உறுப்பெழுத்து போன்ற பல்வேறு சாஸ்திரங்களிலும் ஈடுபட்டு சிறப்புற்றிருந்தவர்கள் பாத்தெமி இமாம்களாவார். (Fatemi Imams) இவர்கள் தமது ஆட்சி செய்ரோவில் (Cairo) இருந்தபோது மகோன்னத நிலையை வகித்தனர்.

அதிவண ஷெய்ட்ஞமொஹமட் புர்ஹானுதீன் விரிவான உலகசுற்றுப் பயணங்களை மேற்கொண்டவர் தமது தந்தையாருடன் இந்தியாவிலும், வேறு உலகநாடுகளிலும் பரவலாகப் பயணங்களை மேற்கொண்டு

'போரா' சமூகத்தவரை மட்டும் சந்திக்காது, மன்னர்கள், ஜனாதிபதிகள், பிரதமர்கள், கல்விமான்கள், எழுத்தாளர்கள், சமூகசேவையாளர்கள் போன்ற பல்வேறுதரத்திலும் உள்ள முக்கியஸ்தர்களை இவர் சந்தித்து அவர்களின் பேரபிமானத்துக்கும் உள்ளானார்.

### பண்பட்டவர்

ஆழ்ந்த கல்வியினால் பண்பட்டிருந்த இவர், இத்தகைய விரிவான சந்திப்புக்கள் மூலம் உலகில் எத்தகைய நபர்களையும், எந்த ஒரு விடயத்தையும் எதிர்கொண்டு கையாளும் வலுவைப்பெற்றுள்ளார்.

தந்தையாரின் தினசரிஒழுக்க முறைகளைப் பின்பற்றி, குறித்த நேரங்களில் மசூதிக்குத் தொழுகைக்காகச் செல்வதும், டாவத் (Dawat) புனித பணியை மேற்கொள்வதும், இவரது அன்றாட வாழ்க்கைமுறையாகும்.

மதவிவகாரங்களுடன் இணைந்த சகல அம்சங்களும் இவரது நேரடிக்கட்டுப்பாட்டின் கீழேயே இருந்துவருகின்றன. 'டாவத்' புனிதப்பணியில் இவரது சொந்தக் கருத்துக்கள் முக்கிய இடப்பெற்று அப்பணியின் அமுலாக்கத்தில் பெரும்பங்குவகிக்கின்றது.

தமது முன்னையவரான டாக்டர் ஷெய்ட்ஞ தாஹிர் சைவுதீன் (A Q) அவர்களைப் போல உபகண்டம் மற்றும் ஏனைய பகுதிகள் குறித்த அறிவை டாய்-எல்-முற்லக் விருத்திசெய்து பயன்படுத்தி வருகின்றார்.

### டாக்டர் பட்டம்

இந்தியாவில் மிக முக்கியத்துவம்வாய்ந்த முஸ்லிம் பல்கலைக்கழகமான அலிகார் (Aligarh) முஸ்லிம் பல்கலைக்கழகத்தின் வேந்தராக அப்பல்கலைக்கழகத்தின் நெருக்கடியானகாலகட்டத்தில் டாக்டர் ஷெய்ட்ஞ தாஹிர் சைவுதீன் தெரிவுசெய்யப்பட்டார்.

தொடர்ந்து ஐந்து தடவைகள் இப்பல்கலைக்கழகத்தின் வேந்தராக இருந்து இதன் நேர்த்தியான செயற்பாட்டுக்காக அவர் அயராது தோள்கொடுத்தார். அத்துடன் அவர் அயரா உழைப்பினாலும் சேவையினாலும் கிடைக்கக்கூடிய வெற்றிகுறித்து கல்வி வரலாற்றில் ஓர் அத்தியாயத்தையும் உண்டாக்கினார்.

தொடர்ந்து இவரின் வழிவந்த அதிவண டாக்டர் ஷெய்ட்ஞ மொஹமட் புர்ஹானுதீன் சாஹிப் T U S அலிகார் (Aligarh) முஸ்லிம் பல்கலைக்கழகத்துக்கு உயர்

(6-ம் பக்கம் பார்க்க)

## மாவட்டச் செயலாளரும், யாழ். மாவட்ட அரசாங்க அதிபருமான உயர்திரு. வை. மு. பஞ்சலிங்கம் அவர்களின் வாழ்த்துச் செய்தி



உலகெங்கும் பரந்து வாழும் தாவூதி போ(ஹ்)ரா சமூகத்தினர் இலங்கையிலும் வாழ்ந்துவருகிறார்கள். யாழ்ப்பாணத்திலும் இச் சமூகத்தினர் தமது மக்களோடு ஒன்றிணைந்து பல்லாண்டு காலமாக நட்புறவுடன் வாழ்கின்றனர். போ(ஹ்)ரா என்ற சொல் "வர்த்தகர்" என்ற பொருளைப் பெறும். இவர்கள் இந்நாட்டில் தலைசிறந்த வர்த்தகர்களாக விளங்குகின்றனர். போ(ஹ்)ரா சமூகத்தினர் "ஒன்றே தெய்வம்" என்னும் கோட்பாட்டில் நம்பிக்கைகொண்டவர்கள்.

போ(ஹ்)ரா சமூகத்தினரின் அதி உன்னத ஆத்மீகத் தலைவராகக் கருதப்படும் வணக்கத்துக்குரிய கலாநிதி செய்யிதினா முஹம்மது புர்ஹானுத்தீன் சாஹிப் அவர்கள் இச்சமூகத்தின் பொதுச் சொத்துக்களைப் பராமரிக்கும் உரிமையுடையவர். எகிப்து நாட்டின் அல்—அஸ்ஹர் சர்வகலாசாலையில் இஸ்லாமிய விஞ்ஞானத் துறைக்கான கலாநிதிப் பட்டம் பெற்ற இவர் அன்பு, அறிவு விவேகம். நன்மதிப்பு ஆகியவற்றைத் தனது அடிப்படைக் கொள்கைகளாகக் கொண்டவர்

1965ஆம் ஆண்டு ஆன்மீகத்தலைவராகப்பொறுப்பேற்ற இப்பெரியார் 1982 ஆம் ஆண்டு இலங்கைக்கு வருகை தந்தார். யாழ்ப்பாண மண்ணும் அவரதுவருகையால் பெருமைபெற்றது. 850 ஆண்டுகளாகத் தொடர்ந்து வரும் ஆன்மீகத் தலைவர்களின் வரிசையில் இவர் 52 ஆவது தலைவராவார்.

இப்பெருமகனார் இவ்வருடம் தனது 75 ஆவது ஆண்டைப்பூர்த்தி செய்கிறார். அவர் மேலும் பல்லாண்டு காலம் வாழ்ந்து போ(ஹ்)ரா சமூகத்தினருக்கு மட்டுமன்றி உலகமக்கள் அனைவருக்கும் ஆன்மீக அருள் பரப்பவேண்டுமென வாழ்த்துகின்றன்,

வை. மு பஞ்சலிங்கம்,
மாவட்டச் செயலாளரும் அரசாங்க அதிபரும்
யாழ்ப்பாண மாவட்டம்.

## அனைவரும் மகிழ்ச்சியடைகிறோம்!



தாவூதி போரா சமூகத்தின் அதி உன்னத ஆன்மீகத் தலைவர் சங்கைக்குரிய கலாநிதி செய்யிதினா முஹம்மது புர்ஹானுத்தீன் சாகிப் அவர்களது 75-வது பிறந்த தினத்தை யாழ்ப்பாணத்தில் வசிக்கும் அச்சமூகத்தினர் கொண்டாடுவதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம்.

இம்மதத் தலைவர் உலகெங்கும் பரந்து வாழும் பத்துலட்சத்துக்கு மேற்பட்ட போரா சமூகத்தை ஆன்மீகத்துறையில் வழிநடத்துபவராவார்.

இவர் யாழ்ப்பாணத்திற்கு 1970, 1979, 1982ஆம் ஆண்டுகளில் விஜயம் செய்ததையும், எரிக்கப்பட்ட நூலக புனரமைப்புக்கு ரூபா 82 000/-மும், தீயணைப்புச் சேவையை ஸ்தாபிப்பதற்கு ரூபா 20 000/-மும் அன்பளிப்புச் செய்ததையும் நாம் நன்றியுடன் குறிப்பிடலாம் இதிலிருந்து இப்பெரியார் தமிழ்மக்களுடன் கொண்டுள்ள அன்பையும் காணலாம்.

இங்கு நடைபெறும் கொண்டாட்டங்கள் சிறப்பாக நடைபெற பிரார்த்திக்கிறோம்

சி. வீ. கே. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகளுக்கு ஏற்ற கல்வியை வழங்க பெற்றோர் முன்வரவேண்டும்

பருத்தித்துறை, சனி

"பெற்றோர் விரும்பும் கல்வியைப் பிள்ளைகளுக்குப் போதிக்க முயன்ற காரணங்களினால் கடந்த காலங்களில் வெவ்வேறு துறைகளில் பிரகாசிக்கக் கூடிய பல பிள்ளைகளின் கல்வி அபிவிருத்திகள் ஸ்தம்பித்திருப்பதை நாம் காண்கிறோம். இது கவலைக்குரிய விடயமாகும். பெற்றோர்கள் தமது விருப்பத்திற்கேற்ப பிள்ளைகளுக்குக் கல்வியைத் திணிக்க முயலக் கூடாது. பிள்ளைகளின் நாட்டம் விருப்பு வெறுப்பு என்பவற்றை கருத்திற் கொண்டு பிள்ளைகளுக்கு ஏற்ற கல்வியை வழங்கி ஊக்குவிக்க பெற்றோர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்."

இவ்வாறு சிறுப்பிட்டி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை பெற்றோர் தினவிழாவிலே பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய கோப்பாய் கல்விபதிகாரி ஆ. வ. தங்கராஜா குறிப்பிட்டார். இப்பெற்றோர் தின விழா பாடசாலை அதிபர் கே. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்றது.

கல்விபதிகாரி தங்கராஜா தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

"மாணவர்களின் கல்வி அறிவு ஆற்றல்கள் பல்வேறு துறைகளிலும் வளர்த்துக் கொள்ளப்பட வேண்டும். மாணவர்களின் கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளில் பெற்றோர்கள் முக்கிய கண்காணிப்புகள் மேற்கொள்ள வேண்டும். பொருளாதார சமூக, கலாசாரங்களுக்கேற்ப கல்வி போதனைகள் இடம் பெற வேண்டும்".

"மாணவர்களின் கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகள் மேம்படுவதற்கு ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் ஆகியோர் இணைந்து சிறப்பாகச் செயற்பட வேண்டும். இதனடிப்படையிலேயே பாடசாலை அபிவிருத்திச்சங்கங்கள் செயற்பட்டு வருகின்றன. பாடசாலைகளின் அபிவிருத்திச் சங்கங்கள் சிறப்பாகச் செயற்படும்போது மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கும் பாடசாலைகளின் வளர்ச்சிக்கும் வழிவகுக்க முடியும்."

## பன்னவேலை பயிற்சி

யாழ்ப்பாணம், திங்கள்

காரைநகர் பயிரிக்கூடல் வாசிகசாலையில் ஆயிலி இளைஞர்கழகத்தினூடாக, பயிரிக்கூடல் இந்து இளைஞர் சங்கத்தின் அனுசரணையுடன் பன்னவேலைப் பயிற்சி நடைபெற்று வருகிறது.

மேற்படி மூன்று மாதப் பயிற்சி முடிவில் பனம்பொருள் அபிவிருத்திச்சபை தேசிய இளைஞர் சேவை மன்றத்தினூடாக சான்றிதழ்களும் வழங்கப்பட உள்ளன. (சி)

## 'பெற்ற பயிற்சியை பயன்படுத்த வேண்டும்'

உரும்பராய், ஞாயிறு

"இளைஞர் சமுதாயம் தாம் பெற்ற பயிற்சிநெறிகளை கல்வி நோக்காகக் கொள்ளாது வாழ்க்கையோடு இணைந்து போகக்கூடிய வகையில பயன்படுத்த வேண்டும்."

இவ்வாறு யாழ்ப்பாணம் திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் பாலகிருஷ்ணன் திருநெல்வேலி விவசாயப் பாடசாலையில் இரண்டுவார உணவு போஷாக்கு பயிற்சிநெறியில் சித்தியடைந்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் கலந்துகொண்டுபேசுகையில் கூறினார்.

இவ்வைபவத்தில் தலைமை வகித்த நல்லூர் உதவி அரசாங்க அதிபர் க. சண்முநாதன் பேசுகையில், பொருளாதார நெருக்கடியுள்ள இக்காலத்தில் கிராமங்கள் தோறும் ஐக்கிய நாணய சங்கங்களை அமைத்து, அதன் மூலம் கடன் உதவிகளைப் பெற்று சிறுகைத்தொழில்களையும், வீடமைப்புகடன்களையும் பெற்றுக்கொள்ளலாம் என்றார்.

தொடர்ந்து அவர் பேசுகையில், ஒவ்வொருவரும் தாம் பெற்ற கல்வியின்மூலம்பெற்ற அறிவை தமமட்டில் வைத்துக்கொள்ளாது சமுதாயத்தில் ஏனையோருக்கும் பயன் தரக்கூடிய வகையில் செயல்பட்டால் நாட்டின் பொருளாதாரச் சிக்கல்களைத் தவிர்த்துக்கொள்ளலாம் என்றும் கூறினார்.

அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி கனகரத்தினம் பேசுகையில், தற்போதைய நாட்டு நிலைமையில் எல்லோரும் முதலுதவிச் சிகிச்சை நெறியை கற்றிருந்தால் பெரும் அழிவிலிருந்து நாம் தப்பித்துக்கொள்ளலாம் என்றார்.

## பிரியாவிடை

உடுவில், ஞாயிறு

உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலையில் கடந்தபல ஆண்டுகளாக ஆரம்ப பிரிவு ஆசிரியைகளாககடமையாற்றி அண்மையில் ஓய்வுபெற்ற திருமதி எஸ். நல்லம்மா, திருமதி கே. சிவபாக்கியம் ஆகியோருக்கு மேற்படி பாடசாலையின் ஆசிரியை நல்லுறவு மன்றம் பிரியாவிடை வழங்கியது.

இவ்வைபவத்தின்போது ஆசிரியை யேகிஸ்வரன் உப அதிபர் செல்லிப்பு கந்தையா, திருமதி து. உருத்திரராசா, திருமதி ஐ. எஸ். சண்முகரட்ணம், திரு. சதியாகராசா ஆகியோர் பாராட்டுரைகள் வழங்கினர். தமக்களிக்கப்பட்ட பாராட்டுக்களுக்கு இரு ஆசிரியைகளும் நன்றி கூறினர். [ஊ]

## இடமாற்றம்

பண்டத்தரிப்பு, ஞாயிறு

திருகோணமலை மாவட்டத்திலுள்ள கிண்ணியா அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றும் டாக்டர் எஸ். சுப்பிரமணியம் எதிர்வரும் ஜனவரி மாதம் தொடக்கம் வடுக்கோட்டை அரசினர் வைத்தியமருந்தகத்தின்பொறுப்பதிகாரியாக இடமாற்றப் பெற்றுள்ளார்.

## "சாரணியம் முன்மாதிரியானது"

கொழும்புத்துறை, ஞாயிறு

"பாடசாலை மாணவர்கள் சாரணர் பணியில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். தியாகம், சேவை மனப்பான்மை, பரஸ்பர நல்லெண்ணம் ஆகியவற்றில் முன்மாதிரியாகத் திகழ்கின்றார்கள். திரிசாரணர்கள் தமது பணியைச் செவ்வனே ஆற்றி வருகின்றனர். மேலும் பல பாடசாலைகளில் சாரண இயக்கம் வளர்வதற்குத் திரிசாரணர்கள் தமது ஆக்கபூர்வமான பங்களிப்பைச் செலுத்த வேண்டும்."

இவ்வாறு உதவி மாவட்ட சாரண ஆணையாளர் இ. தவகோபால் யாழ் மாவட்ட திரிசாரணர் குழுவின் நான்கு புதிய அங்கத்தவர்களுக்குச் சின்னம் சூட்டும் வைபவத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில், சாரணியம் தற்போது மிகவும் உன்னதமான வளர்ச்சியை அடைந்து வருவது மகிழ்ச்சிக்குரியது. சாரணர் இயக்கத்தின் உயர்ந்த நோக்கம் உலகெல்லாம் பரந்து சாரணியத்தை வளர்த்துள்ளது. பாடசாலைகளில் சாரண இயக்கம் சிறப்பான முறையில் இயங்கிவருவது பெருமையளிக்கின்றது. இவ் வைபவம் யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

திரிசாரணர் உதவிமாவட்ட ஆணையாளர் அ. சுப்பிரமணியம் இவ்வைபவத்தில் கலந்து கொண்டார்.

## எரிபொருள் விற்பனை நிலையம்

வேலணை, ஞாயிறு

கடந்த பல மாதங்களாக இயங்காத நிலையில் இருந்து வந்த வேலணை ப. நோ. கூ. சங்கத்தின் எரிபொருள் விற்பனை நிலையம் மீண்டும் இயங்கத் தொடங்குவதற்கான ஏற்பாடுகளை சங்கத்தின் தலைவர் வீ. சிவராசாவும், பொது முகாமையாளர் வே. செல்லத்துரையும் எடுத்துள்ளனர்.

## சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்

வேலணை, ஞாயிறு

வேலணை ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலுள்ள சனசமூக நிலையங்களின் செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்கென உள்ளூராட்சி ஆணையாளரினால் இரு பெண்கள் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

## 'செல்வா நகர்' அபிவிருத்திக்கு ஏற்பாடு

கிளிநொச்சி, ஞாயிறு

சர்வதேச ரோட்டறிக்கழக ஆதரவுடன் கிளிநொச்சியில் மிகவும் பின்தங்கிய பகுதியாகிய செல்வா நகரை அபிவிருத்திசெய்ய கிளிநொச்சி பரந்தன் ரோட்டறிக்கழகம் முன்வந்துள்ளது.

இதன் முன்னோடி நடவடிக்கையாக செல்வா நகர் கிராமத்தில் அபிவிருத்திசம்பந்தப்பட்ட ஆய்வேலையில் ரோட்டறிக்கழக தலைவர் எஸ். எஸ். செல்லையா ஈடுபட்டுள்ளார். பலைபக மக்கள் பெருமளவில் வாழும் கிராமம் செல்வா நகர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## இருள்கலைந்தது

மாவிட்டபுரம், ஞாயிறு

கடந்த சில மாதங்கள் இருளில் மூழ்கியிருந்த மயிலிட்டி பலாலி, வசாவிளான் கிராமங்களுக்கு மீண்டும் மின்சாரம் கிடைத்துள்ளது.

மேற்படி பகுதிகளுக்கு மின்சாரத்தை விநியோகித்து வந்த பலாலி விமானநிலையசந்தியில் இருந்த உப மின்நிலையம் எரிந்து பழுதடைந்தமையால் மேற்படி கிராமங்கள் இருளில் மூழ்கியிருந்தன.

இந்த உப மின்நிலையம் பாதுகாப்பு வலயத்தினுள் இருப்பதால் இதனை சீர்செய்வதிலும் சிரமங்கள் இருந்து வந்தது.

மயிலிட்டி பிரஜை குழுத் தலைவர் வி. இரத்தினராசா இராணுவத்தினருடன் தொடர்புகொண்டு உபமின் நிலையத்தை திருத்துவதற்கு வசதிசெய்து கொடுத்திருந்தார்.

இலங்கை மின்சாரசபையின் காங்கேசன்துறை கிளை மின்சார ஊழியர்கள் மின் அத்தியட்சகர் எஸ். வரதராசா தலைமையிலும், மயிலிட்டி உப அலுவலக மின்சார ஊழியர்கள் மின் அத்தியட்சகர் வி. இரங்கநாதன் தலைமையிலும் மேற்படி உப மின்நிலையத்தை சீர்செய்து 250 [illegible] மாற்றி ஒன்றையும் இணைத்துள்ளனர். [எ]

## நியமனம்

மன்னார், ஞாயிறு

மன்னார் மாவட்ட மீன்பிடி அபிவிருத்தி அலுவலராக ஜனாப் ஏ. சாபி என்பவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இவர் தலைமன்னார் தொடக்கம் விடத்தல்தீவு சிலாவத்துறை போன்ற பகுதிகள்வரை கடமைபுரிவார். (ஒ)

## இடமாற்றம்

பருத்தித்துறை, ஞாயிறு

மந்திகை அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றிய டாக்டர் எஸ். பிரசாப்பரம் பருத்தித்துறை (ரேவடி) அரசினர் டிஸ்பென்சரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். [ஒ]

## பனைகளை பதிவுசெய்யுமாறு வேண்டுகோள்

வேலணை, ஞாயிறு

இருபத்தைந்து பனைகளுக்கு மேல் வைத்துள்ள சொந்தக்காரர்கள் அனைவரும் தத்தமது பகுதியிலுள்ள விசேட சேவை அலுவலர்களிடம் அவற்றை பதிவுசெய்துகொள்ளுமாறு பனை அபிவிருத்திச்சபையினர் வேண்டுகோள் விடுத்திருப்பதாகவும் அவைபற்றிய விபரங்களை சேகரிக்குமாறும் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சகல விசேட சேவை அலுவலர்களுக்குச் சுற்றுநிருபம்மூலம் கேட்டுள்ளதாக அறியப்படுகிறது. (எ)

## வழக்குகள் பதிவு

ஊர்காவற்றுறை, ஞாயிறு

இரவில் வெளிச்சமின்றி வாகனங்களை ஓட்டிய வாகனச் சொந்தக்காரர்களுக்கு எதிராக, சுருவில் தமிழீழ கிராம நீதிமன்றில் வழக்குகள் பதிவாகியுள்ளன.

## வைத்தியசாலைக்கு உபகரணங்கள் அன்பளிப்பு

பருத்தித்துறை, ஞாயிறு

மந்திகை அரசினர் வைத்தியசாலைக்குச் சிகிச்சைபெறவரும் நோயாளர்களின் நலன்கருதி சாவகச்சேரி லயன்ஸ்கழகம் வைத்தியசாலைக்குத் தேவையான உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

நோயாளர்களைக் கொண்டு செல்லும் ஸ்ரெச்சர், நோயாளர்களுக்கு மருந்து ஏற்றும் ஸ்ராண்ட் என்பன இவ் அன்பளிப்பில் அடங்குகின்றன.

வைத்தியசாலைக்கான இவ் உபகரணங்களை சாவகச்சேரி லயன்ஸ்கழக தலைவர் டாக்டர் பீ. பிலிப், பனை வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் திருமதி இ. குமாரதேவனிடம் கையளித்துள்ளார். [சி]

## சிறுமி மரணம்

ஊர்காவற்றுறை, ஞாயிறு

விளையாடிக் கொண்டிருந்த சிறுமியை பெற்றோர் காணவில்லையென்று தேடிய பொழுது, சிறுமி தவறிகிணற்றில்விழுந்து பிணமாகக் கிடந்தாள்.

வேலணை மேற்கைச் சேர்ந்த நடராசா என்பவரின் மகளே பலியானவராவார். ஏழுவயது கொண்ட இச்சிறுமி பெற்றோருக்கு ஒரேஒரு குழந்தையாகும்.

## மக்கள் கடை திறப்புவிழா

வேலணை, ஞாயிறு

"பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தனியார் விற்பனை நிலையங்களுக்கு உணவுப் பொருட்களை விநியோகம் செய்யவேண்டும்" என்று யாழ் மாவட்ட உணவுக்கட்டுப்பாட்டதிகாரி திரு. எஸ். பற்குணம் தெரிவித்தார்.

வேலணை ப. நோ. கூ. சங்கத்தின் மக்கள் கடைத்திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (ஒ)

## தெரிவுக்குழு

வேலணை, ஞாயிறு

தீவுப்பகுதிகளின் தமுதல்தரமான பாடசாலையாகிய வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மகாவித்தியாலயத்தின் கல்வித் தரத்தை உயர்த்தும் நோக்கத்தின் அடிப்படையில் திருவாதவூர் சைவச் செல்வம் தலைவராகக் கொண்ட ஆறுபேர்கள் அடங்கிய கல்விக் குழுவொன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது. (வா)

## மன்னார் மாவட்ட கி. சேவை அலுவலர்கள் மாநாடு

மன்னார், ஞாயிறு

மன்னார் மாவட்ட கிராம சேவை அலுவலர்களின் வருடாந்த மாநாடு, மன்னார் பொதுஊழியர் மண்டபத்தில் தலைவர் செ. மரியதாசன் பீரிஸ் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட மன்னார் அரசாங்க அதிபர் பேசுகையில், மாவட்ட நிர்வாகம் சீரும் சிறப்புமாக நடைபெற வேண்டுமாயின் கிராமசேவை அலுவலர்கள் தங்கள் கடமையைச் சரிவரச் செய்யவேண்டுமென வலியுறுத்தினார்.

மேலதிக அரசாங்க அதிபர் திரு. எஸ். செபநாயகம் பேசுகையில் நாட்டின் நிர்வாகத்தின் முதுகெலும்பாகத் திகழும் கி. சே. அலுவலர்கள் பொறுப்புணர்ச்சியுடன் சேவைபுரிய வேண்டும் என்றார்.

அரசாங்க அதிபர் எம். எம். மக்பூலிடம் கிராம சேவை அலுவலர்களின் கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

அடுத்துப் புதிய நிர்வாக சபைத் தெரிவின்போது பழையவர்களையே தொடர்ந்து செயற்படுமாறு சபை கேட்டுக்கொண்டது. பொதுச் செயலாளரை மட்டும் புதிதாக தெரிவுசெய்து திரு. இ. ஜே. ஜே. மிராண்டா கி. சே. அலுவலர் சேவை செயலாளராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

## 75-வது வயதில்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

சேவை புரிந்தார். இவரின் இச்சேவையைக் கௌரவித்து வேதசாஸ்திரத்தில் Theology கலாநிதிப் பட்டமொன்றை 1966ம் ஆண்டில் மேற்படி பல்கலைக்கழகம் இவருக்கு வழங்கியது.

### குர்ஆனில் ஊறியவர்

பேச்சாற்றலிலும், கருணையிலும் உயர்ந்துநிற்கும் டாக்டர் ஷெய்கு மொஹமட் புர்ஹானுதீன் சாமர்த்தியமாக நகைச்சுவை கலந்து பேசுவதிலும் வல்லவர். இவர் கூறியவை கணீரென்று பலகாலம் மனதில் நிறைந்திருக்கக்கூடியவை.

இவரது சிறப்புக்கு மேலும் அணிசேர்ப்பதாக புனித திருக்குர்ஆனை முற்றிலும் மனனஞ்செய்து வைத்திருக்கும் பண்பும் காணப்படுகின்றது. தனிமையில் இருக்கும்போது இப்புனித நூலின் பக்கங்களைப் புரட்டிப்படிப்பது இவருக்கு மட்டில்லா மகிழ்ச்சியைக் கொடுக்கும்.

உயர்ந்த அறிவும், மதத்தத்துவங்களில் உள்ள ஈடுபாடும் சாதாரண மானிடத்தன்மையிலிருந்தும் அவரை விலக்கிவிடவில்லை. உயர்வு - தாழ்வின்றி அனைத்து மானிட சமூகத்தவரையும் சமமாக இவர் போற்றிவருகின்றார்.

இத்தகைய உயரியவாழ்க்கை முறையின் உறைவிடமாகவும், ஆழ்ந்த அறிவின் சின்னமாகவும் இருக்கும் அதிவணக்கத்துக்குரிய டாக்டர் ஷெய்கு மொஹமட் புர்ஹானுதீன் சாகிப் புனித பரம்பரையொன்றின் புதிய அத்தியாயமாக விளங்குகின்றார்; அவர் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறோம். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனத்துக்கும் தாய் நாட்டுக்கும் நாம் சேவையாற்ற வேண்டும்

## யாழ். அரச அதிபர்

உடுவில் ஞாயிறு-

''யாழ்ப்பாண மக்களுக்கிருக்கும் ஒரே ஆயுதம் கல்வி மட்டுமே இதனை நிலையாக வைத்துக்கொள்ள வெளிநாட்டில் உள்ள நம்மவர்கள் தாராளமாக உதவவேண்டும் இச்சங்கத்தின் உதவி பெற்றுச் செல்லும் மாணவர்கள் எம் கல்வியை நிறைவாக்கிய பின்னர் நம்மினத்துக்கும், தாய்நாட்டிற்கும் பயன்படும் வகையில் சேவையாற்ற முன்வரவேண்டும்''

இவ்வாறு சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க ஆதரவில் நடைபெற்ற புலமைப் பரிசில் வழங்கல் புனருத்தாரண நிதியம் ஆரம்ப விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் எம் பஞ்சலிங்கம் கூறினர். சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சி. குமாரவேலு தலைமையில் விழா நடைபெற்றது.

புனருத்தாரண நிதியத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய அரசாங்க அதிபர் இப்பணி புனிதமானது. இன்னலுக்குள்ளாகும் மக்களுக்கு நாமே உதவவேண்டிய நிலையில் உள்ளோம் சமுதாயத்துக்கு உறுதுணையாக விளங்கக்கூடிய புலமை பரிசில் திட்டம், புனருத்தாரண நிதியம் ஆகிய சேவைகளைத் தொடக்கி வைத்துள்ள இச்சங்கத்தின் நல்லநோக்கம் பாராட்டப்படவேண்டிய ஒன்று எனக் கூறினர்

உடுவில் உதவி அரசாங்க அதிபர் ஆ மகாலிங்கம், கலாநிதி சபா. ஜெயராசா, தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர் சி சிவமகாரசா, சுன்னாகம் பிரஜைகள் குழுத் தலைவர் தி மாணிக்கவாசகர், வைத்திய கலாநிதி ஆ நடராசா, யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபை உதவிச் செயலளர் சு. பரமநாதன். தொழிலதிபர் க கனகராசா, சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் உட்படப் சங்க அங்கத்தவர்கள் பலம் பாராட்டுரை வழங்கினர்.

புலமைப் பரிசில்களுக்கான காசோலைகளை உடுவில உதவி அரசாங்க அதிபர் ஆ. மகாலிங்கம் கையளித்தார்.

வங்கிச் சேவை முகாமையாளர் வ. சி. சிவலிங்கம் நன்றி கூறினர். (எ)

## மரங்களை நாட்டி பசுமை புரட்சி ஏற்படுத்த வேண்டும்

பருத்தித்துறை, ஞாயிறு

''மரங்களை நாட்டிப் பசுமைப் புரட்சியை ஏற்படுத்தி பொருளாதார சுபீட்சத்திற்கு வழிவகுக்க ஒவ்வொருவரும் முன்வரவேண்டும். எமது எதிர்காலச் சந்ததியினருக்கு எம்மால் வழங்கப்படும் அரிய பெரிய உதவி மரங்களை நாட்டி வைப்பதேயாகும்'' என்று வடமராட்சி சுற்றுடல் சூழல் பாதுகாப்பு மரநடுகை ஸ்தாபனத்தின் மரம் நாட்டும் விழாவிலே பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மரங்களை நாட்டியும் பொதுமக்களுக்கு இலவசமாக மரங்களை வழங்கிவைத்தும் உரையாற்றிய இலங்கைப் பனம் பொருள் அபிவிருத்திச் சபை இயக்குநர் க. கனகராஜா குறிப்பிட்டார்.

வடமராட்சி சுற்றுடல் சூழல் பாதுகாப்பு மாநடுகை ஸ்தாபன திட்டப்பணிப்பாளரும் யாழ் உள்நாட்டு வர்த்தக உதவி ஆணையாளருமான த மார்க்கண்டு விழாவிற்குத் தலைமைதாங்கினர்.

இவ்விழாவையொட்டி தெல்புல்லலி புற்றளை சித்தி விநாயகராலயத்தில் விசேட பூசைகள் இடம்பெற்றன ஆலயபிரதம குரு பிரம்மஸ்ரீ விஜயரத்தினக்குருக்கள் ஆசி வழங்கினர்.

வடமராட்சி சுற்றுடல் சூழல் பாதுகாப்பு மரநடுகை ஸ்தாபன உதவித்திட்டப் பணிப்பாளர் ஏ என். திருச்செல்வம் வரவேற்புரை நிகழ்த்தினர். தொடர்ந்து உரையாற்றிய கனகராஜா ''மரங்களை நாட்டுவதன் மூலம் மனிதவாழ்க்கைக்கு வேண்டிய பல்வேறு தேவைகளுக்கு உதவமுடியும். மரங்களை நாட்டி விட்டால் போதுமென்று மட்டும் கருதிவிடக்கூடாது. நாட்டிய மரங்களைப் பேணிப்பாதுகாக்கவும் வேண்டும் பிறந்த நாள் ஞாபகார்த்தமாக ஒவ்வொருவரும் மரங்களை நாட்ட வேண்டும். பொதுசேவை நிறுவனங்கள் எல்லாம் மரம் நடும் இயக்கங்களுக்கு ஊக்கம் வழங்க வேண்டும்'' என்றார்.

யாழ். கல்வித்திணைக்கள விஞ்ஞானக்கல்வியதிகாரி திரு. எஸ். செல்லத்துரை உரையாற்றுகையில் நாட்டின் இயற்கை வளங்களைப் பாதுகாப்பதற்கும் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கும் மரம் நாட்டும் இயக்கங்கள் மிக இன்றியமையாததாகும் என்றார்.

இவ்விழாவில் பலர் கலந்து கொண்டு உரையாற்றினர்கள்.

# புங்குடுதீவு செய்திகள்

### பொருட்காட்சியும் சான்றிதழ் வழங்கலும்

புங்குடுதீவு பெருங்காடு கிராம அபிவிருத்திச் சங்க நிலையத்தில் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க தையல் நிலைய பொருட்காட்சியும், விற்பனையும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் அண்மையில் நடைபெற்றன. [கி]

### பனம் பொருள் பயிற்சி நெறி

புங்குடுதீவு மடத்துவெளி சனசமூக நிலையத்தினர் பனம் பொருள் பயிற்சி நெறி ஒன்றினை புதுவருட முற்பகுதியில் தொடங்க விருக்கின்றனர்.

### வைத்திய சேவை

மக்களின் நன்மை கருதி வைத்திய சேவை ஒன்றினை வேலணை சென்றல் கிளினிக் ஸ்தாபனமொன்று சாட்டி வீதியில் உள்ள பள்ளிவாசல் முன்பாக அண்மையில் ஆரம்பித்துள்ளது. [கி]

### கிறிஸ்மஸ் விழா

கிறிஸ்மஸ் விழா புங்குடுதீவுப் பகுதியில் சிறப்பாக என்றும் இல்லாதவாறு அமைதியான முறையில் கொண்டாடப்பட்டது

### அங்குரார்ப்பண கூட்டம்

புங்குடுதீவுகிழக்குஸ்ரீ கணேசா சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்க அங்குரார்ப்பண கூட்டம் அண்மையில் ஸ்ரீ கணேசா மகாவித்தியாலய மண்டபத்தில் தீவுப்பகுதி மேற்கு உதவி அரசாங்க அதிபர் தா சந்திரசேகரம் தலைமையில் நடைபெற்றது.

### தூய நீர் பெறுதல் சிரமம்

புங்குடுதீவுப் பகுதியில் குடி தண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது கோடை காலங்களில் தான் பல மைல்கள் தூரம் நடந்து சென்று தண்ணீரைப் பெறுவதென்றால் தற்போது மாரிகாலங்களிலும் பல மைல்களுக்குச் சென்று தண்ணீரைப்பெற்றுவர வேண்டிய இக்கட்டான நிலை மக்களுக்கு ஏற்பட்டுள்ளது

கிணறுகளில் தண்ணீர் நிரம்பி வழியும் போதலும் உப்பு நீராகவே இருக்கிறது.

### நெசவுப் பயிற்சி பாடசாலை

மன்னார் சனி

நீண்ட நாட்களுக்குப் பின்னர் மன்னார் நகரத்தில் மீண்டும் நெசவுப்பயிற்சிப் பாடசாலை ஆரம்பிக்கப்படவுள்ளது. இப்பாடசாலைக்கென ஓர் சிரேட்ட நெசவு ஆசிரியர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இப்பாடசாலையில் ஆரம்பத்தில் 15 பெண்கள் பயிற்சி பெறவுள்ளார்கள். இதற்கான ஏற்பாடுகளை மன்னார் தலைமைப்பீட உதவி அரசாங்க அதிபர் திரு அ அருந்தவச்செல்வத்தின் பணிப்புரையின் பிரகாரம் மன்னார் பிரிவு உதவி அரசாங்க அதிபர் வே. சண்முகநாதன் மேற்கொண்டுவருகிறார். [ஒ]

### ஆலோசனைக் கூட்டம்

யாழ்ப்பணம், ஞாயிறு

வட இலங்கை சுதேச வைத்தியசபையால் நடாத்தப்பட்டு வரும் லங்கா ஆயுள்வேத வைத்தியக் கல்லூரியினது ஆலோசனைக் கூட்டம் தைமாதம் 2ம் திகதி வெள்ளிகிழமை காலை கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. [எ]

### உணவுப் பொருள் சேமிப்பு களஞ்சியம்

வேலணை, சனி

ஊர்காவற்றுறைப் பகுதியில் உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடுகள் ஏற்படாமல் இருப்பதற்காக ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம் உணவு சேமிப்புக் களஞ்சியமொன்றினை அமைத்திருக்கிறது. (ஒ)

### சிறுவர்களை நேசிக்க வேண்டும்

உடுவில் ஞாயிறு.

நமது ஆண்டவர் யேசுக்கிறீஸ்து நாதர் சிறுபிள்ளைகளை நேசித்தார். அதேபோலத்தான் இன்று கிறீஸ்தவர்களாகிய நாமும் சிறுவர்களை நேசித்துப் பராமரித்து அவர்களை இந்நாட்டின் தலைவர்களாகவும், ஆரோக்கியமுள்ள நற்பிரஜைகளாகவும் உருவாக்க வேண்டும்

உடுவில் தெற்கு சத்தியபுரம் பகல் பராமரிப்பு நிலையப் பிள்ளைகளின் நத்தார் விழாவில் உரையாற்றிய தென்னிந்திய திருச்சபையின் யாழ்ப்பாண அத்தியட்சகரும், பகல் பராமரிப்பு நிலையப் பொறுப்பதிகாரியுமான திரு. இராசநாயகம் கூறினர்.

சேரகுரு வண. டி. சி. இரட்ணசிங்கம் விழாவை ஆரம்பித்து வைத்தார்,

சிறுபிள்ளைகளின் கலைநிகழ்ச்சிகளைத் தொடர்ந்து ஆசிரியர் திரு இராஜநாயகம் சிறுவர்களுக்கான நத்தார் பரிசுப் பொருட்களை வழங்கினர் (எ-ஒ)

### அதிபர்களுக்கு ஆலோசனை

உடுவில், ஞாயிறு.

1987ம் ஆண்டு பாடசாலைச் சீரமைப்பு திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது ஒரு பாடசாலையிலிருந்து நீக்கப்படும் வகுப்புக்கான மாணவர்களை அவர்களுக்கான வேறு பாடசாலை ஒன்றில் இடம் கிடைக்கும் வரை அப்பிள்ளையை பாடசாலையிலிருந்து அப்புறப்படுத்த வேண்டாம் எனவும். வேறொரு பாடசாலையில் இடம் கிடைத்தமையை உறுதிப்படுத்திக் கொண்ட பின்னரே அம்மாணவர்களுக்கான விடுகை பத்திரங்களை வழங்குமாறும் யாழ்ப்பாணம் பிரதம கல்வி அதிகாரி திரு எஸ். கந்தசாமி பாடசாலை அதிபர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். (எ)

### சங்கத்திடம் புகார்

ஒட்டுசுட்டான், சனி.

பரந்தன் வீதியிலுள்ள பூங்கவனச் சந்தியிலிருந்து கிளிநொச்சி இராணுவ முகாமிற்கு செல்லும் பாதைவரை வாகனங்கள் செலுத்த முடியாத நிலையில் பாரிய கிடங்குகள் இருப்பதால் லொறியுடன் முகாமிற்கு சென்று அனுமதிப் பத்திரம் பெறமுடியாதுள்ளது என்று வாகனச்சொந்தக்காரர்கள் வ. மா லொ. உ சங்கத்திடம் புகார் செய்துள்ளனர். (ஒ)


மானிப்பாயில்
புதிய கல்வி நிறுவனம்
பிறயிற்றன்ஸ் அக்கடமி
(மருதடி பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில்)
பெண்களுக்கான மனையியல் டிப்ளோமா
(தையல், பூவேலை, மக்றமி, கேக், சிகை அலங்காரம் உட்பட)

English, Shorthand and Typewriting
(1987ம் ஆண்டு G C E O/L), லண்டன் பிற்மன், டிப்ளோமா பரீட்சைகளுக்கு)

வகுப்புக்கள் 05-01-87 முறையே காலை, மாலை ஆரம்பமாகும்.

மற்றைய வகுப்புக்களான:
Computer Programming,
தமிழ் சுருக்கெழுத்து - தட்டெழுத்து,
English, Book-Keeping & Accounts, Elocution,
G. C. E. (A/L) (வர்த்தகம்)

விரைவில் ஆரம்பமாக இருக்கின்றன.
விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

Brightons Academy
Cameron Walavu, MANIPAY.
[C-6578]



குறைந்தவிலையில் மிகச்சிறந்த கலண்டர் கிடைக்கும்போது
அதிக விலைகொடுத்து ஏன் வேறு கலண்டர் வாங்கவேண்டும்?
தமிழ் மக்களின் நலன்கருதி யாழ்ப்பாணத்திலிருந்து கடந்த 45 ஆண்டுகளுக்குமேலாகத்
தொடர்ந்து வெளிவந்துகொண்டிருக்கும் ஒரேஒரு தினசரிக் கலண்டர்

ஆனந்தா திருக்குறட் கலண்டர்

பிரம்மஸ்ரீ ரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கக் குறிப்புகளும், பெரியார் தினங்களும்,
அரச வங்கி, வர்த்தக விடுமுறைகளும், கோயில் திருவிழா தினங்களும் மற்றும் அனேக குறிப்புகளும் அடங்கியது;

விலை ரூபா 25/-மட்டுமே.

உங்கள் விற்பனையாளரிடம்
ஆனந்தா திருக்குறட் கலண்டர்
என்று கேளுங்கள்.

[A 3401]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூளைக்காய்ச்சல் அறிகுறிகளும் தடுப்பு முறைகளும்

**— கனக. சத்தியசீலன் —**

மூளைக்காய்ச்சலைப் பற்றி இக்காலகட்டத்தில் ஒவ்வொருவரும் அறிந்திருக்கவேண்டியது அவசியமாகும்.

மூளைக்காய்ச்சல் மரணத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு கொடிய நோயாகும். இது சிறுவர்முதற்கொண்டு முதியவர்வரையிலும் அனைவரையும் பீடிக்கக் கூடியதாகும்.

**மூளைக்காய்ச்சல் தோன்றுகின்ற முறை**

இதற்கு பிரதான காரணம் பக்டீரியா வைரசு போன்ற நுண்கிருமிகள் உடலில் தொற்று ஏற்படுவதால் ஏற்படும்.

**தொற்று ஏற்படும் வழிவகைகளாவன**

ஒருவரின் தலையில் காயம் ஏற்பட்டு மண்டை ஓடு உடைந்துள்ளவேளையில் இக் கிருமிகள் நேரடியாக மூளையை அல்லது மூளையைசூழவுள்ள கவசத்தை தாக்குவதால் உண்டாகும்.

தலைக்கு அண்மையாகவுள்ள முக்கிய உறுப்புகளில் நோய்கள் உள்ள நிலையில் காதால் சீழ்வருதல், மண்டைப்பீனிசம், கண்வருத்தம் போன்ற நிலைமைகளில் இவற்றினூடாக தொற்று மூளையை அடையலாம். ஏனெனில் கண், காது, மூக்கு போன்றவற்றிற்கும் மூளைக்குமிடையே உடல் அமைப்பு ரீதியாக (Anatomy) நெருங்கிய தொடர்பு உண்டு.

மலேரியா, நியுமோனியா, கசம்போன்ற நோய்களுக்கு நோயாளர்கள் தகுந்த வைத்தியம் செய்யாமலும் கவனயீனமான பராமரிப்பினாலும் இருந்தால் இந் நோய் காரணமாகவும் மூளைக்காய்ச்சல் ஏற்படும்.

சாதாரண மற்றைய நோய்களுக்குரிய காய்ச்சலிலிருந்து மூளைக்காய்ச்சலை மக்கள் எப்படி வேறுபடுத்தி அறிவதும் அவசியம்: அதிகரித்த காய்ச்சலுடன் தீவிரமான தலையிடியும் வாந்தியும் காணப்படும். மூளைக்காய்ச்சல் ஏற்பட்ட நோயாளி கண்களால் வெளிச்சத்தைப் பார்க்கமுடியாத நிலையில் இருப்பார். நோயாளி குறி ஒரு முக்கியமான அறிகுறியாகும் இதனை 'கேணிக்சைன்' என்று கூறுவர்.

ஒருவயதுக்குட்பட்ட குழந்தைகளில் உச்சிக்குழி என்று கூறப்படும் தலையில் உள்ள அன்ரீரியா வொன்ரனலே என்ற பகுதி தலையைவிட சிறிது பள்ளமாய் இருக்கும் மூளைக்காய்ச்சல் ஏற்பட்ட குழந்தைகளுக்கு உச்சிக்குழி அதாவது அன்ரீரியா வொன்ரனலே ஊதிக் காணப்படும்

மூளைக்காய்ச்சல்ஏற்படாமல் மக்கள் பாதுகாப்பாக இருப்பதற்கு நுளம்பு மூளைக்காய்ச்சலை ஏற்படுத்துவதற்கு ஒரு காரணம் இது. முதலில் மலேரியாவை ஏற்படுத்தி பின்னர் மூளைக்காய்ச்சலை ஏற்படுத்தும். எனவே சாக்கடை நீர்களுக்கு கொழுப்பு கழிவு எண்ணெய்போன்றவற்றை ஊற்றி நுளம்புக் குடம்பிகளை அழிக்கவேண்டும். நுளம்பு கடியாமல் நுளம்பு வலை பாவிக்கவேண்டும்.

தலையில் ஏற்பட்ட காயங்களுக்கு உடனடியாக தகுந்த சிகிச்சைசெய்து மாற்றவேண்டும்.

காதில் ஏற்பட்ட சீழ் தன்மை போன்றவற்றை சிறிய நோயாக எண்ணி மக்கள் கவலையீனமாக இருக்காது சிகிச்சைபெறவேண்டும்.

மலேரியா, நிமோனியா போன்ற நோய்கள் வந்தால் அவற்றிற்கு உடனடியாக தகுந்த சிகிச்சைசெய்யவேண்டும்.

இக் கருத்துக்களை மக்கள் கவனத்துக்கு எடுத்து சுகாதார முறைப்படி நடைமுறைப் படுத்துவார்களாயின் மூளைக்காய்ச்சலால்ஏற்படும்இறப்பை தடுப்பதுடன் மூளைக்காய்ச்சலால்ஏற்படும் சந்தர்ப்பத்தையும் தவிர்த்துக்கொள்ளலாம்.

மூளைக்காய்ச்சல் உள்ள நோயாளியை நிலத்திற்கு சமாந்தரமாய் படுக்க அவரது தொடையை மட்டும் நிலத்திற்கும் அவரது வயிற்றிற்கும் செங்குத்தாக வைத்து பின்னர் அதேகாலின் பாதத்தை தொடை எலும்புக்கு செங்குத்தாக கொண்டுசெல்லும் போது சாதாரண காய்ச்சல் உள்ள நோயாளிக்கு வேதனை ஏற்படாது. ஆனால் மூளைக்காய்ச்சல் உள்ளவருக்கு அதிக வேதனை ஏற்படும். இந்த அறிகுறி ... யில் பின்பக்கசழுத்தில் நோவுடன் கூடிய பிடிப்புத்தன்மை காணப்படும். அதனுடன் அமைதியின்மை. புத்தித் தெளிவின்மை, உடற்களைப்பு போன்ற குணங்களும் தோன்றும்.

## 'சுதந்திரமான நீதித்துறையே ஜனநாயகத்தின் ஆணிவேர்''

பருத்தித்துறை, சனி.

''நீதித்துறைச் சுதந்திரத்தைக் காப்பாற்றவும், அதனை நிலைநிறுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவரும் அதே வேளையில் சகலரும் நீதித்துறைச் சுதந்திரத்தைக் காப்பாற்றவும், நிலைநிறுத்தவும் பூரண ஒத்துழைப்புக்களை வழங்கவேண்டியது மிகமுக்கியமாகும் நீதித்துறையில் சேவையாற்றும் ஒவ்வொருவரும் சமுதாயத்தின் மிக இன்றியமையாத தூய்மையான சேவைகளில் ஈடுபட்டிருப்பதை மறந்துவிடக்கூடாது''.

மேற்கண்டவாறு மல்லாகம் மாவட்ட நீதிபதியாகப் பதவி உயர்வு பெற்றுச் செல்லும் பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் திரு. கே. கணபதிப் பிள்ளைக்கு பருத்தித்துறை சட்டத்தரணிகள் சங்கத்தால் நடத்தப்பட்ட பிரிவுபசார விழாவிற்கு நன்றி தெரிவித்து உரையாற்றிய நீதிபதி திரு. கே. கணபதிப்பிள்ளை குறிப்பிட்டார்

நீதிமன்றத்தில் பருத்தித்துறை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் சட்டத்தரணி ஆர் ஆர் தர்மரத்தினம் தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

நீதிபதி திரு. கணபதிப்பிள்ளை தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:-

''சுதந்திரமான நீதித்துறையே ஜனநாயகத்தின் ஆணிவேராகும் எனவேதான் நீதித்துறை சுதந்திரத்தைக் காப்பாற்றவும் நிலைநிறுத்தவும்வேண்டியது மிக முக்கியமாகின்றது

''நீதிமன்றங்களில் நீதிவழங்கப்பட்டால்மட்டுபோதாது நீதி வழங்கப்படுவது தெரியப் படுத்தப்படவும் வேண்டும் நீதிச்சேவைப்பணியில் ஈடுபட்டிருப்பவர்கள் நடுநிலைமை நின்று சேவைமனப்பான்மையுடன் சிறப்பாகச் செயற்பட வேண்டும்.'' (கே)

## மன்னாரில் பாதிப்படைந்த மக்களுக்கு நிவாரண நடவடிக்கைகள்

மன்னார், ஞாயிறு

மன்னாரில் நடந்த வன் செயல்களினால் பாதிப்படைந்த 81 குடும்பங்களுக்கு நெற் செய்கை மந்தை வளர்ப்பு, கோழிவளர்ப்பு, சுயமுயற்சி போன்ற செயற்பாடுகளுக்கென யாழ் அகதிகள் புனர்வாழ்வுக்கழகம் நிதிஉதவி வழங்கியுள்ளது.

இதேவேளை ''ஒக்ஸ்பாம்'' நிறுவனத்தினரும் பாதிக்கப்பட்ட இப்பகுதி மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு முன்வந்துள்ளனர்.

இவ் உதவிகளை பெற்றுக் கொடுக்கும் பணியில் மன்னார் துயர்துடைப்பு மறுவாழ்வு சங்கம் மிகத் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

மேலும் இச்சங்கத்தின் வேண்டுகோளை ஏற்று பாதிப்படைந்த 75 விவசாய குடும்பங்கட்கு ஒரு ஏக்கர் நெற்செய்கை செய்வதற்கு தேவையான முக்கிய உள்ளீடுகளைப் பெற்றுத்தர சிறுவர் பராமரிப்பு நிதியம் இணங்கியுள்ளது. இது சம்பந்தமாக பொதுக்காரியதரிசி கருத்துத் தெரிவிக்கையில், 1985, 86ம் ஆண்டு இனக்கலவரத்தில் உயிரிழப்புக்களைக் கொண்ட அல்லது வீடு முற்றாக சேதமாக்கப்பட்ட குறைந்த வருமானமுள்ளதும் வேறு பொதுஸ்தானங்களிடம் இருந்து இதுவரை உதவிகள் கிடைக்கப்பெறாத 75 குடும்பங்கள் தெரிந்தெடுக்கப்படும் என்றும் அவர்களுக்கு ஒருஏக்கர் நெற்செய்கைக்கு உழவுக்கூலி, விதைநெல், அடி உரம், மேற்கட்டு உரம் போன்ற முக்கிய உள்ளீடுகட்கு தலா இரண்டாயிரம் ரூபா வீதம் பண உதவி வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (ஜ)

### கல்விச்சுற்றுலா

யாழ்ப்பாணம், ஞாயிறு

நெல்லியடிப்பகுதியைச் சேர்ந்த சுமார் இருநூறு மாணவமாணவிகள் தனியார் கல்வி நிறுவனம் ஒன்றின் ஏற்பாட்டில் கடந்த சனியன்று கல்விச் சுற்றுலாவொன்றை மேற்கொண்டு யாழ். நகர் வந்தனர்.

இவர்கள் அச்சுவேலி சவர்க்காரத் தொழிற்சாலை, அலுமினியத் தொழிற்சாலை. நீர்வேலி கண்ணாடித் தொழிற்சாலை, பண்டிதர் சரணாலயம், ஈழநாடு பத்திரிகை நிறுவனம் என்பவற்றை பார்வையிட்டனர். (எ)

### பிள்ளையாருக்கு மூஷிக வாகனம்

உடுவில், ஞாயிறு.

உடுவில் கற்பகப்பிள்ளையார் ஆலயத்துக்கு நீண்டகாலமாக இருந்து வந்தவாகனப் பற்றாக்குறையை கடந்த மார்கழி திருவாதிரையன்று அவ்வூர் மக்கள் நிவிர்த்தி செய்துள்ளனர்.

இளைஞர்களின் தீவிரமுயற்சியின் பயனாக ஓர் மூஷிக வாகனம் அமைக்கப்பட்டுள்ளது.

மூஷிகவாகனத்தையும் அதனை அமைந்த ஆசாரியரையும் உடுவில் மக்கள் ஊர்வலமாக கோவிலுக்கு அழைத்து வந்தனர். திருவாதிரை நாளன்று விசேஷ பூசைகள் நடைபெற்று மூஷிகவாகனத்தில் [illegible] பிள்ளையார் திருவுலா வந்தார். (எ)


# பிரயாண ஒழுங்குகள்

**லிபியா:-**

ஒயில் கொம்பனி லேபறேஸ் 1987-ம் வருடம் 16-ம் திகதிக்கு மேல் பயணம் தொடங்குகின்றது. 200 வேலையாட்கள் தேவை. செல்ல விரும்புவோர் வேண்டிய ஆவணங்களை எம்மிடம் சமர்ப்பிக்கவும்.

**சவுதி அரேபியா:-**

கிளீனேஸ் – 25 வயது முடிந்தவர்கள்மட்டுமே எடுக்கப்படுவார்கள். 200 பேர் தேவை. உடன் வந்து சந்திக்கவும்.

**குவைத்:-**

பணிப் பெண்கள் – 18 வயதுக்கும் 25 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் உடன் நேரில் வரவும்.

**டுபாய்:-**

பணிப்பெண்கள் – 18 வயதுக்கும் 25 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் மட்டும்.

**குவைத்:-**

ஹவுஸ் றைவேஸ் - வயது 18—35 வரை.

மேற்குறிப்பிட்ட நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகள் செய்து தரப்படும். சகலரும் நேரில் வந்து தொடர்புகொள்ளவும்.

**டாக்டர் கே. எஸ். பரம்சோதிநாதர்,**
பிரசாந்தி வைத்திய நிலையம்,
கற்பகப்பிள்ளையார் கோவிலடி,
உடுவில் கிழக்கு உடுவில்.

பி. கு: இணுவில் ஆஸ்பத்திரிக்கு முன்னால் உள்ள நியூ லிங்கம் சலூன் ஒழுங்கையால் வரவும்.

[A-3262]

# பிரயாண ஒழுங்கு

'யூனிவேர்சல் ஏஜென்சி' ஸ்தாபனத்தாரின்

## பணிவானவேண்டுகோள்

இவ்வருட முடிவில் எமது வரவு செலவுக் கணக்கைப் பூர்த்தி செய்யத் தீர்மானித்திருக்கிறோம்.

அதையிட்டு எமது காரியாலயத்திலும், எமது உப-ஏஜென்சியுடனும் கொடுக்கல் வாங்கல் தொடர்பு கொண்ட அனைவரும் இம்மாத முடிவுக்குள் நீங்கள் தொடர்புகொண்ட விடயம் பற்றியும், உங்கள் கொடுக்கல் வாங்கல் பற்றிய விபரத்தையும், எமது காரியாலயத்திற்கு வந்து தெரிவிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

எமது ஸ்தாபனத்திடம் கடன் பெற்றுச் சென்றோரின் பொறுப்பாளர்களும் தவறாது வந்து தொடர்பு கொள்ளும்படி தயவாகக் கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் 1987ம் ஆண்டு ஜனவரி மாதத்திற்கான எமது பிரயாண ஒழுங்குகளின் விபரம்:

**லிபியா**
ஒயில் கம்பனி வேலையாட்கள்
(150 வெற்றிடங்கள்)

**சவுதி அரேபியா**
கிளீனேர்ஸ் OPEN VISA வயது 26-40
[160 வெற்றிடங்கள்]

**குவைத்**
ஏற்கனவே எம்முடன் தொடர்புகொண்டவர்களுக்கு மட்டும்.

பிரயாண ஒழுங்குகள் செய்யப்படவுள்ளன என்பதையும் அறியத்தருகின்றோம்.

அத்துடன்
பாஸ்போட், பொண்ட், ரிக்கற்றிங் என்பனவும் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்.

**இத்துடன் நத்தார், புதுவருட வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்,**

# Universal Agencies (யூனிவேர்சல் ஏஜென்சி)

125, [455] ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

[ஆயுர்வேதக் கல்லூரிக்கு அருகாமையில்-பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு) முன்பாக
(A 3265)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

1986 வன்செயல்களால்

# மரணமானோர் 676 பேர், காயமடைந்தோர் 257

## அ. பு. கழகம் தரும் விபரம்

யாழ்ப்பாணம், திங்கள்

1986ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை இடம்பெற்ற வன்செயல்களினால் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு, அநுராதபுரம், கொழும்பு ஆகிய மாவட்டங்களில் 676 பேர்கள் கொல்லப்பட்டும், 257 பேர்கள் காயமடைந்தும், 14 பேர்கள் இடம் பெயர்ந்துள்ளார்கள்

அபிவிருத்தி புனர் வாழ்வுக் கழகத்தினருக்குக் கிடைக்கப் பெற்ற தகவல்களிலிருந்து வன்செயல்களால் கொல்லப்பட்டோரதும் காயமடைந்தோரதும் புள்ளி விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

யாழ்ப்பாண மாவட்டம்:- கொல்லப்பட்டோர் — 309, காயமடைந்தோர் — 136

கிளிநொச்சி மாவட்டம்:- கொல்லப்பட்டோர் — 75 காயமடைந்தோர் — 49

முல்லைத்தீவு மாவட்டம்:- கொல்லப்பட்டோர் — 55 காயமடைந்தோர் — 20

வவுனியா மாவட்டம்:- கொல்லப்பட்டோர் — 75 காயமடைந்தோர் — 20

திருமலை மாவட்டம்:- கொல்லப்பட்டோர் — 37 காயப்பட்டோர் — 04

மன்னார் மாவட்டம் கொல்லப்பட்டோர் -85 காயமடைந்தோர் -28

மட்டக்களப்பு மாவட்டம் கொல்லப்பட்டோர் -35 காயமடைந்தோர் இல்லை

அம்பாறை மாவட்டம் கொல்லப்பட்டோர் இல்லை காயமடைந்தோர் இல்லை

அநுராதபுரமாவட்டம் கொலலப்பட்டோர் 3 காயமடைந்தோர் இல்லை

கொழும்பு மாவட்டம் கொல்லப்பட்டோர் 2 காயமடைந்தோர் இல்லை (வா)

# தமிழ்ச் சிறுர்களின் கல்வியை பாழடிக்க மேற்கொண்டுள்ள செயலா?

### — எம் எஸ் செல்லச்சாமி

கொழும்பு, ஞாயிறு

"தமிழ்மொழியை அவமதிக்கும் விதத்தில் 1987ம் ஆண்டு இறுதிப்பரீட்சைக்கான சமூக கல்விப்பகுதி 2 என்ற வினத்தாள் அச்சிடப்பட்டுள்ளது இவ்வினத்தாள்களில் எழுத்துக்கள் இடம்மாறியும் எழுத்துப்பிழைகள் அதிமாகவிடப்பட்டும் வசனப்பிழைகளும் அநேகமாக காணப்படுகின்றன இதன்காரணமாக பரீட்சைஎழுதும் மாணவர்கள் விடயங்களைச் சரிவரப் புரிந்துகொள்ள முடியாது திகைத்துள்ளனர்"

இவ்வாறு இ தொ. காங்கிரஸ் செயலாளர் திரு எம் எஸ் செல்லச்சாமி விடுத்துள்ள அறிக்கை ஒன்றில்குறிப்பிட்டுள்ளார்

அவ் அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

கொழும்பு கல்வி மாநிலத்திலுள்ள அனைத்து உத்தியோகஸ்தர்களுக்கும் தமிழ் முஸ்லீம் கல்வியதிகாரிகளுக்கும் இந்த செயல் அவமதிப்பதை யும், இழுக்கையும் ஏற்படுத்தக்கூடியதாக எல்லா தமிழ் முஸ்லீம் பாடசாலைகளுக்கும் இவ்வருட இறுதி வகுப்பேற்று பரீட்சைக்காக தயாரித்து அனுப்பப்பட்டுள்ளது.

இவ்வினத்தாள் களைக் கொண்டு கொழும்பிலுள்ள தமிழ்பேசும் சிறுர்களின் கல்வியை ஒரேயடியாகப் பாழடிக்கவேண்டுமென்ற அடிப்படை நோக்கத்திலேதான் பிழையான இந்தவினத்தாள் உருவாக்கப்பட்டிருக்கின்றது இந்தச்செயலுக்கு கல்வி அமைச்சோ கல்வி அமைச்சரோ பொறுப்பு இல்லையென்பதை நாம் உணர்கின்றோம் ஆனல் கல்வி அமைச்சருக்கும், அதன் அமைச்சுக்கும் இழிவுபடுத்தும் முகமாக சிலர் திட்டமிட்டே செய்திருக்கிறார்கள் அதனுல் ஒற்றுமை உருவாவதற்குப் பதில பிரச்சினைகளையே உருவாக்கிவிட்டிருக்கின்றது

அரசாங்கத்தில் உத்தியோகம் பார்த்து, அரசாங்கத்தின் சம்பளத்தைப்பெற்று கடமையைச் செய்யவேண்டிய பொறுப்புள்ளவர்கள் இவ்வாறு அசட்டையாக வேண்டா விருப்பத்தோடு அச்சிட்டு விநியோகித்திருப்பதிலிருந்து அவர்களுடைய நோக்கத்தை கல்வி அமைச்சர் புரிந்து கொள்ள வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்

இந்த அச்சிடட வினத்தாள்களையும், விபரத்தையும எடுத்துக்கூறி இலங்கை ஆசிரியர் காங்கிரஸ் தலைவர் திரு எம் எஸ். செல்லசாமி கல்வி அமைச்சரின் கவனத்திற்கு எழுதப்பட்டகடிதத்தில் குறிப்பிட்டிருப்பதாவது:

பரீட்சையில் யாரும் சித்தியடையவிட்டால் அது மணவர்களுடைய குற்றமாகாது எனவே நடாத்தப்பட்ட பரீட்சையை உடனடியாக ரத்து செய்யவேண்டும். மீண்டும் பரீட்சையை நடத்த புதிய வினத்தாள்கள் அச்சிடப்பட வேண்டும் இந்தச்செயலுக்கு யார் காரணம் என்பதைக் கண்டுபிடித்து சம்பந்தப்பட்டவர்கள் மீதுதகுந்த விசாரணை நடத்தி தண்டிக்கப்படவேண்டும் தரமுள்ள தமிழர்களைக் கொண்டு வினத்தாள் புதுப்பிக்கப்படவேண்டும்.

வினத்தாள் அச்சிடப்பட்டிருப்பது பெரும் அபகீர்த்தியையு பாதிப்பையும் ஏற்படுத்தக் கூடியவை என்பதை மனதில் கொண்டு மேற்கொண்டு நடவடிக்கையை பாரபட்சமற்ற முறையில் நடத்தவேண்டுமென அக்கடிதத்தில் கோரியிருப்பதாக இலங்கை ஆசிரியர் காங்கிரஸ் பொதுக்காரியதரிசி திரு க. சிவஞானம் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதோடு அந்த வினத்தாள் பிரதிகளையும் இணைத்து அனுப்பிவைத்துள்ளார்.

## மாதிரி பனைவளப் பண்ணை

மன்னார், ஞாயிறு

மன்னார் மாவட்ட பனைவள அபிவிருத்திச் சபையினரால் வாலை நறுவிலுக்குளம் என்ற இடத்தில மாதிரிப்பனைவளப் பண்ணைஒன்று அண்மையில் திறந்துவைக்கப்பட்டது இதில் ஏறத்தாள பத்தாயிரத்துக்கு மேற்பட்ட பனங்கொட்டைகள் பயிரிடப்பட்டுள்ளன இதற்கான சகலவேலைகளையும் மேற்படி பனைவளவெளிக்கள அலுவலர் திரு. மு நல்லகுமார் கவனித்து வருகின்றார். (ஊ)

## நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், திங்

திருமகள் சனசமூக நிலைய மாதர் கிராம அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர்தெரிவு செய்யப்பட்டார்கள்.

தலைவி திருமதி அ பாக்கியவதி, உபதலைவிகள் செல்வி ஐ சரஸ்வதி, செல்வி ஐ சாந்தி, செயலாளர் திருமதி க கலாதேவி, உப செயலாளர் திருமதி உ. சந்திராலகா, பொருளாளர் திருமதி ப. றஞ்சினி, கணக்காய்வாளர் திருமதி நா; திலகவதி 7 பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது (வா)

## இணைப்பதிகாரி

மன்னார், ஞாயிறு

மன்னார் இ போ ச டிப்போவுக்கு புதிய இணைப்புஅதிகாரியாக முன்னுள் சுங்க அலுவலராகக் கடமைபுரிந்த ஜனுப் எஸ் சபூர் வடபிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவரால் நியமனம் செய்யப் பட்டுள்ளார். (ஒ)

## இன்று பாராட்டு

யாழ்ப்பாணம், திங்

மொறிஸியஸ் நாட்டில் தமிழ் மக்களுக்கும் இந்து சமயத்துக்கும் பணியாற்றி விட்டுதிரும்பியுள்ள சிவஸ்ரீ ந. பாலசுப்பிரமணிய குருக்கள் இன்று யாழ் சிவானந்த குருகுல பரிபாலனசபையினுல் பாராட்டிக் கௌரவிக்கப்படவிருக்கிறார்.

## கோரிக்கை

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை நாவற்குழி உப அலுவலக அதிகாரயளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு கனகசிங்கத்தின் இடமாற்றத்தை இரத்துச் செய்யுமாறுகோரி நாவற்குளி உப அலுவலக சனசமூக நிலையங்களின சமாசம் மறவன்புலோ கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியன உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு மகஜர் ஒவ்வொன்றை அனுப்பியுள்ளார்கள். (ஒ)

## ஆரம்பக் கல்வி அவசியம்

மாவிட்டபுரம், ஞாயிறு

கல்விக்கு ஆரம்பக் கல்வி முக்கியமானது, ஆரம்பத்தில் பெறும் அறிவின் மூலம்தான் எதிர்காலக் கல்வி மேம்பட வழி பிறக்கும். இந்தவகையில் இவ்வாறுன சிறுவர் கல்வி நிலையங்கள் ஆற்றிவரும் பணி மிகவும் போற்றுதற்குரியது

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் நடைபெற்ற அம்பனை நவீன பாலர் கல்வி நிலைய 12 வது ஆண்டுவிழா பரிசளிப்புவிழா ஆகியவற்றில் முதன்மை விருந்தினராகக் கலந்து உரையாற்றிய தெல்லிப்பழை மாவட்ட வைத்திய அதிகாரி திரு. சி. கதிரவேற்பிள்ளை இவ்வாறு கூறினர்.

யாழ் கிளிநொச்சி மாவட்ட திட்ட மேற்பார்வையாளர் திரு. க. இரத்தினவேல் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் யாழ் தேசிய கூட்டுறவுச் சபைத்தலைவர் திரு எஸ் சிவகுமாராசாவும் உரையாற்றினர். சிறுவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன திருமதி கே கதிரவேற்பிள்ளை பரிசில்களை வழங்கினர். (வா)



கிளிநொச்சி வஞ்சிவனக் கல்வி நிலையத்தில் நடைபெற்ற இந்துமாமன்ற பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட உருத்திரபுரம் மகாவித்தியாலய அதிபர் திரு. நா நடலிங்கம் முதற்பரிசைப் பெற்றுக் கொண்ட மாணவனுக்குத் தங்கப்பதக்கம் அணிவிக்கும்போது எடுக்கப்பட்ட படம். சமூகசேவையாளர் திரு. எட்வேட் மரியதாஸ் இத்தங்கப்பதக்கத்தை அன்பளிப்புச் செய்துள்ளார். (படம்: கிளிநொச்சி நிருபர்)

# 'ஹெலி'யிலிருந்து சுட்டதில் இளம் பெண் காயம்

சுன்னுகம், ஞாயிறு

இரண்டு பாரிய விமானங்கள் பலாலி விமான நிலையத்தில் இறங்குவதற்கு பாதுகாப்பளித்த ஹெலிகாப்டரில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதில் கட்டுவனைச் சேர்ந்த மகாலிங்கம் இரத்தினேஸ்வரி வயது 31 முதுகில்காயப்பட்டு தெல்லிப்பழை அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இத் துப்பாக்கிச் சூட்டிற்கு ஆளான மகாலிங்கம இரத்தினேஸ்வரி பன்னிரண்டு நாட்களுக்கு முன்பு பிள்ளை ஒன்றை பிரசவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது, (வா)

எம். ஜி. ஆரும், சிதம்பரமும்

# 'ரெலோ' உண்ணுவிரதத்தைக் கைவிடக் கோரிக்கை

சென்னை, டிச 28

தமிழீழ விடுதலை இயக்க உறுப்பவர்கள் தமிழ் நாடு பொலிஸாரினல் கைது செய்யப்பட்டது குறித்தும் அவர்களை விடுதலை செய்யவேண்டுமெனக்கோரியும் சாகும்வரை உண்ணுவிரதமிருக்கும் தமிழீழ விடுதலை இயக்க உறுப்பினர்களை உண்ணுவிரதத்தை கைவிடுமாறு தமிழக முதல்வர் எம் ஜி ராமச்சந்திரனும், மத்திய இணையமைச்சர் ப சிதம்பரமும் வேண்டியுள்ளனர்

தமிழீழ விடுதலை இயக்க போராளிகள் கைதுபற்றியும் அவர்களின் ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டது குறித்தும் ஆராயப்படும் என்றும் தமிழக முதல்வர் தெரிவித்துள்ளார்.

தமிழக பொலிஸார் தமது இயக்கத்தை மாத்திரம் அவமானப் படுத்தும் விதத்தில் நடந்துள்ளார்கள் என்று ரெலோ தலைவர் செல்வம் தெரிவித்துள்ளார்.

இத்தவேளை தமிழகத்தின் எதர்கட்சியான தி மு கழகத்திற்கும் தமிழீழ விடுதலை இயக்கத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாக அரசியல் வட்டாரங்களில் பேசிக்கொள்ளப்படுகிறது. (ஒ)

## மின் தடை

சுண்டிக்குளி, ஞாயிறு.

நவாலி ஆனைக்கோட்டைப் பகுதிகளில் இரவு வேளைகளில் தினமும் மின்சாரம் அடிக்கடி தடைப்படுகின்றது.

இம் மின்தடையால் இப் பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்கள், தொழிற்சாலைகள் ரியூட்டரிகள் முதலியன பெருமளவில் பாதிக்கப்படுவதுடன் பாடசாலைப் பிள்ளைகளும் தமது பாடங்களைப் படிக்கமுடியாது மிகவும் கஷ்டப்படுகின்றனர்.

## கொடியேற்றம்

யாழ்ப்பாணம், திங்கள்

பொன்னாலை அருள்மிகு ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தான மார்கழி மாத மகோற்சவம் தை மாதம் 2ம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளது. (வா)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



ப ப இறகரி (D K)
(பாக்கியமுத்து)
அன்னையின் மடியில்:
14 04-1922
ஆண்டவன் அடியில்:
29-12 1985

எமது குடும்பத்தின் ஒளி விளக்காய், பாசத்தின் உறைவிடமாய், அன்பின் ஊற்றாய் இருந்து எம்மை யெல்லாம் வழி நடத்திய அன்புத் தெய்வமே எம்மை விட்டுப் பிரிந்து ஒரு ஆண்டு சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் நெஞ்சத்திலே அணையா ஒளித் தீபமாக என்றும் ஒளி வீசும். உங்களுடைய ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்:

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப் பிள்ளைகள்.

புதிய இல 6,
4ம் ஒழுங்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

(C 6600)

## புளியமரக் கன்றுகள் கேள்விகள்

மாவட்ட பிரதான வீதிகளின் அருகே, 1987ம் ஆண்டு பிற்பகுதியில் நாட்டப்படுவதற்கு 25) நல்ல இன புளியங் கன்றுகட்கு கேள்விகள் கோரப்படுகின்றன. இவை பின்வரும் முறையினதாக இருத்தல்வேண்டும்:

1. சிறந்த இனத்தை உடையனவாயும்,
2. 3 அடிக்குக் குறையாத வளர்ச்சியுடையதாயும்
3. பொலித்தீன் உறையில் வேண்டிய மண் அணைப்புக்களுடன் வேரூன்றியவைகளாகவும்.

கன்றுகள் 1987-ம் ஆண்டு செப்டெம்பர் முற்பகுதியில் குறிப்பிட்ட பிரதான வீதிக்கு அண்மையில் உள்ள மாவட்ட அபிவிருத்திச் சபை உப-டணிமனைகளில் கையளிக்கப்பட வேண்டும். தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர்கள் எனக்கு புளியமரக் கன்றுகள் வளர்க்கும் இடத்தையும் அறிவித்தல் அவசியமாகும் கேள்விகள் எதிர்வரும் 15-01-1987க்கு முப் பிந்தாமல், வை.மு.பஞ்சலிங்கம், மாவட்டச் செயலாளரும், அரசாங்க அதிபரும், செயலகம், யாழ்ப்பாணம் என்னும் விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். கேள்விகளின் மேல் உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''புளியமரக் கன்றுக்கான கேள்வி'' என எழுதப்பட்டிருத்தல் வேண்டும். இவை நேரடியாக யாழ் செயலக நிர்வாக உத்தியோகத்தரின் அறையில் உள்ள கேள்விப் பெட்டியிலும் சேர்க்கப்படலாம்.

வை. மு. பஞ்சலிங்கம்,
யாழ்.மாவட்ட செயலாளரும்,
அரசாங்க அதிபரும்.

[A-3406]

ஜனநாயக விரோதத்தை———

# ஒழித்துக்கட்ட சகல முற்போக்கு சக்திகளும் ஒன்றுபடவேண்டும்

நெல்லியடி, ஞாயிறு ''கிழக்குமாகாணத்தில் அண்மையில் நடந்தேறிய துன்பியல் நிகழ்வுகள், வரலாற்றுக்குமுற்பட்டகால நிகழ்ச்சிகளையே இன்று எமக்கு நினைவூட்டுகின்றன. குற்றம் புரியாதவர்களும் தண்டிக்கப்படுவது மட்டுமன்றித் தங்கள் உயிர்களையும் பலிகொடுக்க வேண்டி நேரிடலாம் என்பதையே இச்சம்பவங்கள் காட்டுகின்றன இதன் பின்னரும் இந்நாட்டில் நாகரிகத்தின் நிழல் காணப்படுகின்றது எனக் கூற ஒருவர் முன்வருவாராயின் அவருக்குத் தகுந்த இடம் மனநோய் வைத்திய சாலையாகும்.''

இவ்வாறு வடமராட்சிப் பிரஜைகள் குழுக்களின் ஒன்றியத்தின் தலைவர் திரு. ஜே. ஜீ. ராசேந்திரம் பத்திரிகைகளுக்கு விடுத்தசெய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து திரு. இராசேந்திரம் தெரிவிக்கையில்

'இன்று இந்நாட்டில் அதிகமவைகளுக்கிடைக்கக்கூடிய ஒரே பண்டம் மனித உயிராகும் நாட்டின் அபிவிருத்தி, தேசிய ஒருமைப்பாடு, இனங்களுக்கிடையே ஐக்கியம் என்றெல்லாம் திரிசரணசுத்தியுடன்பேசுபவர்கள்கூட இராணுவக் கெடுபிடிகளுக்கு விதிவிலக்கல்ல வென்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. இன்றைய உண்மை நிலையை மேலும் விளக்கமாகக்கூறுவதாயின், அரசுக்கு எதிராக வாதாடுபவர்கள் எந்த இனத்தைச் சேர்ந்தவர்களாயினும் அவர்கள் ஆபத்து வலயத்தில் இருப்பவர்களாகவே கணிக்கப்படல் வேண்டும். இவ்விதஜனநாயக விரோத நிலைமையை ஒழித்துக்கட்டச் சகல புரட்சிகர, முற்போக்குச் சக்திகளும் ஓரணியின் கீழ் திரண்டு களத்தற்குதிககவேண்டியது அவசியம்.

[ஒ-ஊ]

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



க. யோகனகாந்தன்
(ரஞ்சன்) (புலி
பிறப்பு: 27-09 1965
அழிப்பு: 10-12 1985
திதி:29-12-1986

நீ
மடியில் புரண்டு மழலைகள் மொழிந்து
மாலைகள் செய்த நினைவுகள் அழியுமுன்
விடிவைத் தேடிய விறல்
வேங்கையாய்
'வென்று வருவேன் நின்று
பாரும்மா'
என்று புறப்பட்டாய்,
காத்திருந்த கண்கள்
காணக் கொடுத்து
வைக்கவில்லை.
மகனே நீ!
களம் புகுந்து சமர் புரிந்து
காண்பவர் வியக்க நின்ற
வேளை
காலன் மனம் பொறுக்க
வில்லை!
கூற்றென வந்த குண்டை
மார்பிலேற்றாய்
கண்ணெனக் காத்த
மண்ணைக்
குப்புறத் தழுவி முத்த
மிட்டாய்
நெஞ்சக் குருதி
மண்ணைச் செம்மைப்
படுத்த
உன் ஆவி
அம்மண்ணுள் வேர்பாய்ச்
சியது
உன் இலட்சியம்
கிளை பரப்பி விருட்சமாய்
வளர்கிறது
இன்னுயிர் ஈந்த நின்
இலட்சியம் கண்டு
ஈன்றவர் துயர் மறக்க
முனைகின்றோம்
சோதரர் சோகம் களை
கின்றார்
சோதியாய் உன்னைக்
கண்டு கொண்டே
உற்றவர் உறவினர் மற்ற
வர் அனைவரும்
பெற்றவர் போலவே
குற்றுயிர் ஆயினர்.
ரஞ்சனே! எம்நெஞ்சனே!
எமதுயிர் உள்ளளவும்
வாழ்வாய் நீ.
உன் நினைவைச் சுமந்து
வாழும்!

அப்பா, அம்மா, அண்ணா
தங்கை, தம்பி,
உறவினர் நண்பர்கள்
கண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

[C 6280]

## ஈராண்டு நினைவஞ்சலி



கணேசன் சோமேஸ்
அன்னையின் மடியில்:
11-09-1963
அரக்கனின் பிடியில்:
04 01-1985

எங்கள் குடும்பத்தின் மூத்த புதல்வனாய் தோன்றி நபளித்த அன்புச் செல்வமே! பண்பினாலும் இன் சொற்களாலும் எல்லோர் மனதையும் கவர்ந்த பண்பாளனே! உமது நினைவு எமது நெஞ்சில் என்றும் நீங்காது. உமது ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்:

உமது அருயிர் அப்பா,
அம்மா, தம்பிமார்,
மாமன்மார் குடும்
பங்கள், நண்பர்கள்,
தோழர்கள்,

திருநெல்வேலி.
யாழ்ப்பாணம்.

[C 6605]

## ஆஞ்சநேயர் உற்சவம்

யாழ்ப்பாணம், திருவண்ணை வேங்கடேச வரதராஜப் பெருமான் கோயில் ஆஞ்சநேய சுவாமி ஜயந்தி உற்சவம் நாளை செவ்வாய்க் கிழமை நடைபெறும்.

[ஓ]

பருத்தித்துறை
நகராட்சிமன்றம்

## வரவுசெலவுத் திட்டம்–1987

இலங்கைக் குடியரசின் சட்ட ஆக்கங்களின் 255-ம் அத்தியாயமான நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 1979-ம் ஆண்டின் 13-ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 178 3ம் பிரிவின் பிரகாரம் இச்சபையால் அங்கீகரிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட 1987-ம் ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்டம் தற்பொழுது இவ்வலுவலகத்தில் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. இதனை அலுவலக நேரங்களில் பார்வையிடலாம் என்பதை இத்தால் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

க. சண்முகநாதன்,
செயலாளர்,
(தலைவருக்காக)
நகராட்சிமன்றம்,
பருத்தித்துறை.

நகராட்சிமன்ற அலுவலகம்,
பருத்தித்துறை.

[A-3409]

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

## ஏஜெண்டுகள்

தமிழ் ஈழ ராணுவத்தினரின்

## தமிழ் ஈழம் போர் நிதி

மாதாந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு

பின்வருவோர் கீழே குறிப்பிடப்பட்ட தொகுதிகளுக்கு விநியோகஸ்தர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள். விற்பனையாளர்கள் இவர்களிடம் தொடர்பு கொள்ளவும்:

பருத்தித்துறை, உடுப்பிட்டி:

1. திரு S. சிவருஜா,
ராணி ஸ்ரோரஸ், பருத்தித்துறை.

கோப்பாய், உடுப்பிட்டி:

2. திரு. இ. சிவலிங்கம்
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

சாவகச்சேரி:

3. திரு. S. பாலச்சந்திரன்
அருள் அழகன் ரேடர்ஸ், கைதடி.

காங்கேசன்துறை, வட்டுக்கோட்டை:
யாழ்ப்பாணம், மானிப்பாய்:

4. திரு. S. சற்குணநந்தன்
வீனஸ் ஸ்ரூடியோ,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

நல்லூர், யாழ்ப்பாணம், கோப்பாய்:

5. திரு. S. லோகேஸ்
மணிப்புரி, கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

தீவுப்பகுதி:

6. திரு. S. தர்மரத்தினம் (ரஞ்சன்)
''கைல வாசம்''
பெருங்காடுச் சந்தி, புங்குடுதீவு.

[A-3408]

## மலிவு விற்பனை

அலுமினியத் தொழிற்சாலையில் சிறு பழுதடைந்த பாத்திரங்கள் மிக மலிவு விலையில் கொடுக்கப்படும்.
[பானைகள். சட்டிவகைகள்]
கையிருப்பில் சொற்பமே, முந்துங்கள்.

பேள் உலோகத் தொழிற்சாலை,
384, பணிச்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
[பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்]

[C-6576]

குறுகிய காலத்தில்

## Computer Programming and Data Processing

## Basic Language

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்
03-01-87 சனி, ஞாயிறு வகுப்புகள் 3 மாதம்
05-01-87 திங், புதன், வெள்ளி வகுப்புகள் 2 மாதம்
மொத்தக் கட்டணம் 750/- மட்டும்.
சேரும்பொழுது செலுத்த வேண்டியது 500/- மட்டும்.
O/L படித்த இருபாலாரும் சேரலாம்.

Unikco Computer Center
282, யாழ்ப்பாண ரோட், மானிப்பாய் [C6545]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரங்களை நாட்டுவதுடன் சரிய முறையில் பராமரிக்க வேண்டும்

மாவிட்டபுரம், ஞாயிறு

வருடாவருடம் மரங்களை நாட்டிக் கொண்டிருப்பதால் பயன் இல்லை. நாட்டும் மரங்களை சரியான முறையில் வளர்க்க ஒழுங்குகள் செய்யப்படவேண்டும், மரங்களை நாட்டி அவற்றை பராமரித்து வளர்க்காவிடில் மரம் நாட்டுவதில் அர்த்தமே இல்லை',

இவ்வாறு கீரிமலை வசந்தபுரம் கிராமத்தில் இடம்பெற்ற மரம் நாட்டு விழாவில் பிரதம அதிதியாக கலந்துரையாற்றிய வலி வடக்கு உதவி அரசாங்க அதிபர் செல்வி மைதிலி சோமசுந்தரம் கூறினார்.

திரு. ஜோன் பொஸ்போ தலைமையில் நடந்த இவ்விழாவில் காங்கேசன் சிமெந்து ஆலை பொறியியலாளர்கள் திரு. சி தேவரத்தினம், திரு ரி சபாரத்தினம், விசேடசேவை அலுவலர் திரு செ சச்சிதானந்தம் கிராமசேவை அலுவலர் திரு கே வேலாயுதபிள்ளை வலி வடக்கு கிராம அபிவிருத்தி அதிகாரி திரு.க. ஸ்ரீபதி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகப்பங்குகொண்டனர். (ஞ)

## புதிய அதிபர்

பருத்தித்துறை ஞாயிறு

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக்கல்லூரியின் அதிபராக திருமதி லீலாவதி சந்திரசேகரம் கல்வித் திணைக்களத்தால் நியமிக்கப்பட்டு பொறுப்பேற்றுள்ளார். இவர் உதவி அரசாங்க அதிபர் திரு ரீ சந்திரசேகரத்தின் பாரியாரென்பதும், இக்கல்லூரியின் உபஅதிபராகக் கடமையாற்றியவரென்பதும் குறிப்பிடத்தக்கது.

கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றிய திருமதி தேவமலர் அரியரட்ணம் கடந்த 21ந் திகதியுடன் சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளார்.

## இலாபம்

சுழிபுரம், ஞாயிறு

தொடர்ந்து பலவருடங்கள் நஷ்டத்தில் இயங்கிவந்த சங்கானை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்துக்கு இவ்வாண்டு இருப்பு எடுப்பில் மூன்று இலட்சத்து ஏழாயிரம் ரூபா இலாபம் ஏற்பட்டுள்ளதாக சங்கத் தலைவர் திரு வ கிருஷ்ணசாமி பெரும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார்.

அரசாங்க நிர்ணயப்படி தொழிலாளர்களுக்கு கூடுதல் சம்பளமும் பாக்கி இல்லாது வங்கப்பட்டு விட்ட செய்தியையும் தெரிவித்துக் கொண்டார்.

சங்கம் தொடர்ந்து பல பாரியவேலைத் திட்டங்களை செயல்படுத்தவுள்ளதாகவும், இதற்கான ஆய்வுகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## ஞாபகார்த்த கட்டிடம்

சுழிபுரம், ஞாயிறு

பண்ணாகம் மெய்கண்டான மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தினர் வித்தியாலய பொன்விழாவையொட்டி அதிபர் அலுவலகம் ஒன்றை அமரர் திரு செ ஸ்ரீநிவாசன் நினைவாக அமைத்துக் கொடுக்கவுள்ளனர்.

இக்கட்டிடத்திற்கு வடமாகாண கல்வி நிர்வாக அதிகாரி திரு கா. சந்திரராசா அடிக்கல்லை நாட்டிவைத்தார் கட்டிட வேலைகள் மிகத்துரிதமாக நடைபெற்று வருகின்றன இக்கட்டிடநிதியை அமரர் திரு செ ஸ்ரீநிவாசன் குடும்பத்தினர் வழங்கியுள்ளனர்.

## தேயிலைத் தோட்டங்களில் காட்டுமரம் ------ பல லட்சம் தொழிலாளர்கள் வேலை இழக்கும் அபாயம்!

### --- இ. தொ. கா. துணைச்செயலர் எச்சரிக்கை

பதுளை, ஞாயிறு

"அறுபத்தைந்து சதவீத அந்நியசெலவணியை சம்பாதித்துத்தரும் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வு வளமுறவேண்டுமாகில் தேயிலைச் செடிகளை வளர்ப்பதில் இந்த அரசாங்கம் அக்கறை காட்ட வேண்டும்'' என்று இ தொ. கா. உதவிச் செயலாளர் திரு டி வி. சென்னன் பதுளையில் நடைபெற்ற கூட்டமொன்றில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து அங்கு பேசுகையில் இந்த அரசாங்கம் தேயிலைச் செடிகளை வளர்ப்பதற்குப் பதிலாகத் தேயிலைத் தோட்டங்களில் காட்டு மரங்களையே நடுகைசெய்கிறது. இவ்வாறு அரசாங்கம் காடுகளை வளர்ப்பதன்மூலம் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கையை இருளடையச்செய்யும் அபாயத்திலிருந்தும் விடுபட அனைவரும் விழிப்புடன் இருக்க வேண்டும் என்றார். (ரா)

## ஜனவரி முதல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முழுமையாக ஈடுபடவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த ஸ்தாபனம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் இணைந்து செயல்பட முடிவு செய்துள்ளதாகவும், அடுத்த ஆண்டு முதல் இலங்கையின் தமிழ்ப் பகுதிகளில் மேற்படி இயக்கம் சிவில் நிர்வாகத்தை நடத்தும்வகையில் ஆலோசனைகளை வழங்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செல்வி லக்ஷ்மி நாகநாதன் இலங்கை வெளிநாட்டுச் சேவையின் ஒரு சிரேஷ்ட ராஜதந்திரியாகவிருந்து மேற்கு ஜேர்மனிக்கான இலங்கைத் தூதராகக் கடமையாற்றிவந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை அரசுடன்கொண்ட கருத்து வேறுபாடு காரணமாக இவர் தமது பதவியை இழக்க நேரிட்டது

செல்வி லக்ஷ்மி நாகநாதன் 'இரும்பு மனிதா' என்று வர்ணிக்கப்பட்ட முன்னாள் தமிழரசுக் கட்சிப் பிரமுகர் டாக்டர் ஈ. எம் வி நாகநாதனின் மகளாவார் என்பதும் குறிப்பிடத்தக்கது

## நஞ்சருந்தி ------ தற்கொலை செய்த பெண் சித்த சுவாதீனமற்றவர்

யாழ்ப்பாணம், திங்கள்

கடந்த வியாழக்கிழமை யாழ் பெரியாஸ்பத்திரியில் நஞ்சருந்திய நிலையில் அனுமதிக்கப்பட்டு மரணமான இளம்பெண், சங்கானை மேற்கு பண்டத்தரிப்பைச் சேர்ந்த பராசக்தியின் மகள் கிருஷ்ணவேணி 38 வயது) என்று அவரது சகோதரன் அடையாளம் காட்டியுள்ளார்.

திருமணமாகாத இந்த இளம் பெண்ணின் மரணம் சம்பந்தமாக மரணவிசாரணை அதிகாரி க கேசவன் மரணவிசாரணை நடாத்தினர்.

மரண விசாரணையின்போது மரணமான இளம் பெண்ணின் சகோதரனை குப்பளானையைச் சேர்ந்த ப பேரின்பபாலசுப்பிரமணியம் சாட்சியமளித்ததாவது: மரணமான எனது சகோதரியை 23-ம் திகதி செவ்வாய்க்கிழமை சங்கானையில் அவர் தனிமையாக வசித்து வந்த வீட்டில் சந்தித்தேன் பின 26-ம் திகதி வெள்ளிக்கிழமை மீண்டும் சங்கானைக்குச்சென்றபோது அவரைப் பராமரித்து வந்த செல்வரஞ்சிதம் என்பவர் 25ம் திகதியில் இருந்து காலஞ்சென்றவரைக்காணவில்லை என்று கூறினர்.

காலஞ்சென்றவரை அன்றைய தினம் எல்லா இடமும் தேடிப்பார்த்தேன். கடைசியாக குப்பிளான் வந்து வீட்டில் 27ம் திகதி சனிக்கிழமை ஈழநாடுபத்திரிகை வெளியான யார் இந்த இளம்பெண் என்ற செய்தியை வாசித்தவுடன் நேற்றுமாலை யாழ் ஆஸ்பத்திரி சென்று சடலத்தைப்பார்த்து அடையாளம் காட்டினேன்.

1984ம் ஆண்டு தொடக்கம் காலஞ்சென்றவர் சித்த சுவாதீனமற்றிருந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. விசாரணை முடிவில் சடலம் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

## கடைசி நேர வரி விளம்பரம்

### வகுப்புக்கள்

G C E O/L 1987, 9, 8, 7, 6, 5 ஆகிய வகுப்புக்களுக்கான கணிதம், 2-1-1987 ஆரம்பமாகின்றது. கணித அறிவு இல்லாத எந்த ஒரு மாணவரும் அதிவிசேட சித்திக்கு பயிற்சி அளிக்கப்படும் ஆசிரியர்:-ம யோசப் அப்பிறல். ஆசிரியரின் திறமையைப்பார்க்க முதல் மாதம் இலவசம் அத்துடன் டிஸ்கோ டான்ஸ் பயிற்றுவிக்கப்படுகின்றது 4, புனித யுவானியர் கோவில் வீதி ஒழுங்கை, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம் [ஹரன் வெடிங் வேக்ஸ்க்கு முன் ஒழுங்கை.] C 6606

## சான்றிதழ்கள்

பருத்தித்துறை, ஞாயிறு

1980ம், 81ம் ஆண்டுகளில பாடசாலைகளிலிருந்து க பொ த சாதா) தரப் பரீட்சைகளுக்குத் தோன்றிச் சித்தியடைந்தவர்களுக்கான பெறு பேற்றுச் சான்றிதழ்கள் பரீட்சைத் திணைக்களத்தால் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக்கல்லூரியிலிருந்து தோற்றிச் சித்தியடைந்த மாணவிகளின் சான்றிதழ்கள் எதிர்வரும் 2ம் திகதி 2-1-87) கல்லூரியில் வைத்து அதிபரினால் வழங்கப்படவுள்ளது

இச்சான்றிதழ்களுக்கு உரியவர்கள் அன்றைய தினம் அடையாள அட்டையுடன் நேரில் வந்து சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென கல்லூரி அதிபர் திருமதி சந்திரசேகரம் அறிவித்துள்ளார்.

## 'கொட்டிவலிகய'

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து விசாரிப்பதிலும் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர்

இறுதியாக ஒரு மணி நேரத்துக்குப் பின்னர் இத்தகவல் ஒருவதந்தி என்பது தெரியவந்தது. திரு காமினி பொன்சேகா விருந்துபசார மொன்றில் பாதுகாப்பாக இருப்பதாக அறிவிக்கப்பட்டது

நடிகர் காமினி பொன்சேகா 'கொட்டிவலிகய' என்ற இலங்கைத்தீவிரவாதப் பிரச்சினை குறித்த திரைப்படத்தை தாயாரித்ததிலிருந்து சர்ச்சைக்குரியவராகக் காணப்படுகிறார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திரைப்படத்தில் திரு. பொன்சேகா தமிழ்மக்களின் உண்மை நிலையை விளக்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சுரண்டலை முறியடிப்பது பாவனையாளர் கடமை

பருத்தித்துறை ஞாயிறு

"இன்றைய நிலையில் பொருளாதாரச் சுரண்டலை முறியக்க வேண்டிய பொறுப்பு பாவனையாளர் சங்கங்களையே சார்ந்ததாகும். பாவனைப்பொருட்கள் பற்றி பாவனையாளர்களின் முறைப்பாடுகளுக்கு பாவனையாளர் சங்கங்கள் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். பாவனையாளர் சங்கங்கள் வர்த்தக முறைகள் பற்றிய அடிப்படைத் தகவல்களைச் சேகரித்து பாவனையாளர்களுக்கு வழங்கவேண்டும்''

இவ்வாறு யாழ்.மாவட்ட பாவனையாளர் சங்கங்களின் சமாஜத்தை அங்குராட்பணம் செய்துவைத்து உரையாற்றிய யாழ் மேலதிக அரசாங்க அதிபர் திரு எஸ் இராமநாதன் குறிப்பிட்டார். யாழ். அரசாங்க அதிபரின் காரியாலயத்தில் நடைபெற்ற இக் கூட்டத்திற்கு யாழ் உள்நாட்டு வர்த்தக உதவி ஆணையாளர் திரு த மார்க்கண்டு தலைமை தாங்கினர் மேலதிக அரசாங்க அதிபர் திரு இராமநாதன் மேலும் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது;

பாவனையாளர் சங்கங்கள் பாவனையாளர்களின் நன்மை கருதிச் சந்தை விலைகளைக் கண்காணிக்கவேண்டும் சிங்கப்பூர் போன்ற நாடுகளில் பாவனையாளர் சங்கங்கள் மிகப் பலம் வாய்ந்த நிறுவனங்களாக இயங்குவதனால் பாவனையாளர் பெருநன்மையடைந்து வருகின்றனர். அரச வர்த்தக நிறுவனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், தனியார் நிறுவனங்கள் என்ற எதுவித வேறுபாடுகளுமின்றிப் பாவனையாளர் சங்கங்கள் பாவனையாளர்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். பாவனையாளர் சங்கங்கள் சமூகசேவைக்கான இயக்கம் என்பதைக் கருத்திற்கொண்டு உறுப்பினர்கள் நேர்மை கடமையுணர்ச்சி, சேவை என்பவற்றை வழங்கவேண்டும். இக்கடமை தெய்வத்தினால் கொடுக்கப்பட்ட கடமை என்பதை உணர்ந்து செயற்படவேண்டும்.

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது
லிடோ திரையில்
10-30, 2-30, 6-30
சுரேஷ் ரேவதி
கவுண்டமணி மனோரமா
நடித்த
ஆகாயத் தாமரைகள்
[புதிய வெளியீடு கலர்]
Suitable For Adults

புதிய வெளியீடு
வெலிங்டன் திரையில்
10-30 2-30 4 30 6-30
WILLIAM KATT
SEAN YOUNG
IN BABY
[Action-Colour]

## கல்லுடைக்கும்

(1 ம் பக்கத் தொடர்ச்சி

யாகின இதுசம்பந்தமாக விடுதலை அமைப்புக்களுக்கும் அரசாங்க அதிபர் ஆகியோருக்கும் முறைப்பாடுகள் செய்யப்பட்டும் எதுவித நிவாரணமும் கிடைக்கவில்லையென்று கூறப்படுகின்றது.

இந்தத் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டதனால் பாதிப்படைவோர் புதிதாக நிறுவப்பட்ட தொழிற்சாலை உட்பட சகலவற்றையும் மூடக்கோரி இன்று ஒருநாள் அடையாள உழிமறிப்புப் போராட்டத்தை நடத்து[illegible]

## மன்னார் தமிழ்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இவர்களில் 124 அகதிகளை கடற்படையினர் பொறுப்பேற்று மன்னார் அரசாங்க அதிபரிடம் ஒப்படைத்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இவர்களில் 50 ஆண்களும் 40 பெண்களும், 30 சிறுவர்களும் அடங்குவர் இவர்களுக்கான நிவாரண உதவிகளை மன்னார் அரசாங்க அதிபர் அகதிகள் புனர்வாழ்வு திட்டத்தின் மூலம் வழங்கவுள்ளதாக தெரியவருகிறது.

மற்றுமொரு தொகை அகதிகள் நேற்று மன்னார் கரையை அடைந்ததாவும் இவர்களில் சுமார் 70 பேர் அடங்குவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது மேலும்பல அகதிகள் இன்னும் ஒரிரு தினங்களில் நாடு [illegible] (த)

## கட்டாய சமூகம்

வவுனியா, ஞாயிறு

"பிரதேச சபைக் கூட்டங்களுக்கு ஒவ்வொரு இலாகாக்களிலிருந்தும் ஒரு அதிகாரி தவறாது சமூகமளிக்க வேண்டும் சமூகமளிக்காத அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்'' என்று வவுனியா அரச அதிபர் வவுனியா மாவட்ட சகல இலாகாக்களுக்கும் உத்தரவிட்டுள்ளார்.

பிரதேச சபைகள் நல்ல முறையில் இயங்குவதற்காகவே இந்த நடவடிக்கை என்று தெரிவித்துள்ள அரச அதிபர் ஜனவரி முதல் பிரதேச சபைக் கூட்டங்களுக்கு இலாகாக்களிலிருந்து யார் கலந்து கொள்வது என்ற விபரம் அந்த இலாகா தலைவர் மூலம் முடிவு செய்யப்பட்டு அறிவிக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார். (ரா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
29 12 86 திங்கட்கிழமை

### வல்வை, பருத்தித்துறையில்

# வானிலும் தரையிலும் பாதுகாப்பு படைகள்மீது தாக்குதல்!

வல்வெட்டி, ஞாயிறு

வல்வை இராணுவத்தினர் வெளியேவர முயன்றபோது புலிகளின் ஷெல் தாக்குதலால் முன்னேற முடியாது முகாம் திரும்பினர்.

நேற்றுமுன்தினம் இரவு சுமார் 2-30 மணியளவில் வல்வை இராணுவ முகாமிலிருந்து சுமார் 5க்கு மேற்பட்ட இராணுவத்தினர் முகாமின் கிழக்குப்புறமாக உள்ள ஆலடி வீதியாலும், கடற்கரைப் பகுதியாலும் வெளியேவர முயன்றபோதே அப்பகுதியில் காவலில் நின்ற தமிழீழ விடுதலைப்புலிகள் இந்த ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

இதனையடுத்து முன்னேற முடியாது இராணுவத்தினர் முகாமுக்குத் திரும்பினர். அங்கிருந்து சுமார் 6 மோட்டார் ஷெல்களை ஏவினர். இவற்றில் ஒரு ஷெல் வல்வை சிவன்கோவில் வளவு கிணற்றுப் பகுதியில் விழுந்து வெடித்து பலத்த சேதத்தை உண்டுபண்ணியுள்ளது.

விடுதலைப் புலிகளும், இதனைத்தொடர்ந்து மோட்டார் ஷெல்களை முகாம் நோக்கி ஏவினர்.

இதனால் சேதங்கள் பல ஏற்பட்டிருக்கலாம் எனவும், சேத விபரம் பற்றித் தெரிந்துகொள்ள முடியாமலில்லையென வும் தெரிவிக்கப்பட்டது.

சுமார் 45 நிமிடநேரம் இத் தாக்குதல் இடம்பெற்றது.

இதேவேளை பருத்தித்துறை சீ-பிளேன் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் கலிபர் தாக்குதலை நடத்தினர். தொடர்ந்து கடற்படைப் பீரங்கிக் கட்டலிலிருந்து பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

பருத்தித்துறையில் தமிழீழ விடுதலைப் புலிகளால் சுடலைப் பக்கமாகப் புதிய முறையில் பாதுகாப்பு அரண் ஒன்று அமைப்பதில் ஈடுபட்டிருந்த சமயம் அப்பகுதியால் வந்த சீ-பிளேன் அப்பகுதியைச் சுற்றி வட்டமிட்டதோடு தாழப்பறந்து அப்பகுதியை படம்பிடித்ததை அவதானித்த விடுதலைப் புலிகள் சீ-பிளேன் மீது 50 கலிபர் தாக்குதலை மேற்கொண்டனர். இத்தாக்குதலால் சுற்றி வட்டமிடுவதை நிறுத்தி சீ-பிளேன் உயரப்பறந்துசென்றது.

இச் சம்பவத்தைத் தொடர்ந்து இப்பகுதியில் கடலில் நிலைகொண்டிருந்தகடற்படை பீரங்கிப்படகு பலதடவைகள் கரையை நோக்கி பீரங்கிக் குண்டுகளைத் தீர்த்தது. இத் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் விதத்தில் கரையிலிருந்தும் புலிகளால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதில் கரையோர வீடுகள் சில சேதமடைந்ததாகவும் வேறு பாரிய சேதங்கள் எதுவும் ஏற்பட்டதாகத் தெரியவில்லையெனவும் அறிவிக்கப்பட்டது.

## 2-வது டெஸ்ட் இந்தியா 1-54

சென்னை, டிச 28

நாக்பூரில் நடைபெற்று வரும் இலங்கை-இந்திய அணிகளுக்கிடையேயான இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின் 2வது நாளான நேற்று இந்தியஅணி 1 விக்கட் இழப்புக்கு 54 ஓட்டங்களைப் பெற்றது.

மழையின் காரணமாக ஆட்டம் சில மணித்தியாலங்கள் தாமதித்தே ஆரம்பிக்கப்பட்டது இலங்கை அணிதனது முதலாவது இனிங்கில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 204 ஓட்டங்களைப் பெற்றது தெரிந்ததே. (க)

## சுகாதார விழா

யாழ்ப்பாணம், திங்கள்

அச்சுவேலி பிரதேச ஆரம்ப சுகாதார நிலையத்தினர் ஒன்றிணைந்து நடாத்தும் சுகாதாரவிழா அச்சுவேலி மகா வித்தியாலயத்தில் இன்று திங்கட்கிழமை நடைபெறும்.

செல்வி கௌரி தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக டாக்டர் விஜயரட்ணமும், சிறப்பு விருந்தினராக சுகாதார பரிசோதகர் திரு. தங்கராசாவும் கலந்துகொள்வர். திருமதி அமரசிங்கம்திரு பேரின்பநாயகம்திருமதி இராசமணி செல்வி ஜெனிற்று செல்வி நந்தினி ஆகியோர் சுகாதாரம் சம்பந்தப்பட்ட உரைகளை நடத்துவார்கள்.

இறுதியாக நடைபெறவுள்ள கலைநிகழ்ச்சியில் வில்லுப்பாட்டு, நாடகம் கவியரங்கு கவிதா நிகழ்வு ஆகிய அம்சங்கள் இடம்பெறும். (ரா)

### 1987-ம் ஆண்டுமுதல் பருத்தித்துறை

## ஹாட்லி, மெதடிஸ், வேலாயுதம் வித்தியாலயம் 6-ம் ஆண்டு வகுப்புகள்

பருத்தித்துறை, ஞாயிறு

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரி, புலோலி வேலாயுதம் மகாவித்தியாலயம் ஆகிய மூன்று பாடசாலைகளிலும் 1987ம் ஆண்டு தொடக்கம் 5ம் வகுப்பு (6ம் ஆண்டு) நடாத்தப்படவுள்ளதாகவும் கல்விப்பணிப்பாளர் திரு இரா சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறைக் கல்வி வட்டாரப் பாடசாலை, கொத்தணிப்பாடசாலைகளின் அதிபர்களுக்கு புலோலி மெதடிஸ் மிஷன் பாடசாலையில் நடாத்தப்பட்ட கூட்டத்திலேயே கல்விப் பணிப்பாளர் இத்தகவலை வெளியிட்டார். பருத்தித்துறை கல்வியதிகாரி திரு பீ. சச்சிதானந்தம் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. பருத்தித்துறை கல்வி வட்டாரப் பாடசாலைகளினதும், கொத்தணி அமைப்பின் கீழும் இயங்கும் பாடசாலைகளின அதிபர்களுமாக 44 பாடசாலைகளின் அதிபர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

தெரிவுசெய்யப்பட்ட கல்லூரிகளான பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரி ஆகிய இரண்டிலும் 1987ம் ஆண்டில் 5ம் வகுப்பில் (6ம் ஆண்டு) மாணவர்களை அனுமதிப்பதற்கான பிரவேச போட்டிப் பரீட்சையெதிர்வரும் ஜனவரி மாதம் 3 ம் திகதி நடத்தப்படுமென்றும், இப்பிரவேசப் போட்டிப் பரீட்சையை நடத்துவதற்குத் தெரிவு செய்யப்பட்ட குழுவில் வட்டாரக் கல்வியதிகாரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அதிபர், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் கல்லூரி அதிபர், ஆரம்பப் பாடசாலை அதிபர்கள் இருவர் ஆகியோர் இடம்பெற்றிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மாணவர்களின் கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளை மேம்படுத்துமுகமாகவே பாடசாலைகள் மகிமைப்படுத்தல் செய்யப்பட்டுவருவதாகவும், இம்மகிமைப்படுத்தல் திட்டத்தின்கீழ் 1ம் வகுப்புத் தொடக்கம் 4ம் வகுப்பு (5 ஆண்டு) வரை வகுப்புகள் உள்ள பாடசாலைகள் ஆரம்ப பாடசாலைகள் எனவும், 1ம் வகுப்பு தொடக்கம் 7ம் வகுப்பு (8ம் ஆண்டு) வரை வகுப்புகள் உள்ளபாடசாலைகள் சிரேஷ்ட இடைநிலைப் பாடசாலைகள் எனவும் 1ம் வகுப்பு தொடக்கம் 11ம் வகுப்பு வரையும் (12ம் ஆண்டு) அல்லது 1ம் வகுப்புத் தொடக்கம் 13ம் வகுப்பு வரையும் (14ம் ஆண்டு அல்லது 5ம் வகுப்பு (6ம் ஆண்டு) தொடக்கம் 13ம் வகுப்பு (14ம் ஆண்டு) வரை வகுப்புகள் உள்ள பாடசாலைகள் சிரேஷ்ட பாடசாலைகள் எனவும் பிரிக்கப்பட்டுள்ளனஎன்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஈ. பி. ஆர். எல், எவ். பெண் உறுப்பினர் கைது!

மட்டக்களப்பு, ஞாயிறு

தீவிரவாத இயக்கமொன்றைச் சேர்ந்த பெண் ஒருவர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

களுவாஞ்சிக்குடியில் கைது செய்யப்பட்ட இப்பெண் ஈ. பி. ஆர். எல். எவ் இயக்கத்தைச் சேர்ந்தவர் என்று அரச தரப்பில் அறிவிக்கப்பட்டது. (ரா)

### கிளி. இலங்கை வங்கி தளபாடங்கள்

## வவனியாவுக்கு மாற்றம்

கிளிநொச்சி, ஞாயிறு

இராணுவ குண்டுச் சத்தங்களின மத்தியில் கடந்த பல மாதங்களாக மூடப்பட்டநிலையில் உள்ள கிளிநொச்சி இலங்கைவங்கியின் தளபாடங்களும் தஸ்தாவேஜுகளும் வவனியா மாவட்டத்திற்கு கடந்த வெள்ளிக்கிழமை கொண்டு செல்லப்பட்டதாக விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந் நடவடிக்கையின்போது போராளிகள் குறுக்கிடாமல இருக்க வ இராணுவத்தினர் குண்டுகளை வெடிக்க வைத்தனரென அவ்வட்டாரங்கள் கூறின.

இதேவேளை இராணுவ அசம்பாவிதங்களை அடுத்து இலங்கை வங்கி மூடப்பட்டதால் இப்பகுதி பொதுமக்கள், விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை வங்கியைப் பரந்தனுக்கு இடம் மாற்றுமாறும் பல பொது அமைப்புகள் கோரிக்கைவிட்டும் இலங்கைவங்கி அலட்சியமாக இருந்து வந்ததும் குறிப்பிடத்தக்கது. (கே)

## மரமுந்திரிகை நடுகை அங்குரார்ப்பணம்

வேலணை, ஞாயிறு

நாளை செவ்வாய்க்கிழமை மண்கும்பான் கிராமத்தில் மரமுந்திரிகைத் தோட்டமொன்று வேலணை உதவி அரசாங்க அதிபரினால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவிருக்கின்றது.

இவ் அங்குரார்ப்பண வைபவத்தை யொட்டி வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு தா. சந்திரசேகரம்தலைமையில் கருத்தரங்கொன்றும நடைபெறவிருக்கின்றது.

இக் கருத்தரங்கில் யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. கே. இராமநாதன் யாழ் மாவட்டசமநலச் சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் திரு க- பரமலிங்கம் உட்பட பல அரசாங்க பொது நிறுவனங்களினது பிரதிநிதிகளும் கலந்துகொண்டு கருத்துரை ஆற்றவுள்ளார்கள். (ரா)

### வவனியாவில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பாக்கெட்டுக்குள்ளிருந்த 12 ஆயிரம் ரூபா அபகரிக்கப்பட்டிருந்ததை அறிந்தார்.

வவனியாவிலிருந்து ரயில் மூலமாக இவர் கொழும்பு செல்லவிருந்தார். தமது பணம் அபகரிக்கப்பட்டது குறித்து பொலிசாரிடம் இவர் முறைப்பாடு செய்தார்.

தொடர்ந்து வவனியாபொலிசார் வகுப்புத் தொழிலாளர் இருவரைச் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

### கடத்தப்பட்ட. .

1-ம பக்கத் தொடர்ச்சி)

பட்டன இருந்தும் இந்த இயந்திரத்தை ஈ பி. ஆர். எல் எவ் இயக்கத்தினரைப் பற்றித் தமது இயக்க பத்திரிகையான கண்ணோட்டத்தில் வெளியிட்டுவந்தது குறிப்பிடத்தக்கது.

காலஞ்சென்ற முன்னாள் கோப்பாய் எம். பி திரு. கதிரவேற்பிள்ளையின் இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த இந்த இயந்திரம் நேற்று முன்தினம் தமிழீழ விடுதலைப் புலிகளினால் மீட்கப்பட்டு உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ரா)

### பீரங்கி படகு ரோந்து

வேலணை ஞாயிறு

தீவுப்பகுதியின் கடலோரங்களில பாரிய பீரங்கி கப்பல்களில் நடமாட்டம் சில தினங்களாக அதிகரித்துள்ளன. புங்குடுதீவு கடற்பிராந்தியத்திலும மண்டைதீவு கடற்பிராந்தியத்திற்குட்பட்ட பகுதிகளை உள்ளடக்கிய கடற் பிராந்தியங்களிலேயே மூன்று பாரிய பீரங்கிப்படகுகள் நிலைகொண்டுள்ளன.

இந்த மூன்று பாரிய பீரங்கிப்படகுகளில இரண்டு கடற்பிராந்தியத்தில் நிலைகொண்டுள்ளன. மற்றைய ஒன்று ரோந்து கண்காணிப்புகளில ஈடுபட்டு கொண்டிருக்கின்றது. இதன் காரணமாக புங்குடுதீவு, வேலணை, அல்லைப்பிட்டி, மண்டைதீவு கடற்றொழிலாளர்கள் மீன் பிடிப்பதற்கு கடலுக்குச் செல்ல அஞ்சுகிறார்கள்.

### மட்டு பதில் அரசஅதிபர் கடத்தப்பட்டு விடுதலை

(மட்டக்களப்பு)

இனந்தெரியாதவர்களால் நேற்று முன்தினம் கடத்திச்செல்லப்பட்ட மட்டக்களப்பு பதில் அரசாங்க அதிபர் திரு. செல்வரட்ணம் நேற்று பகல் 11 மணியளவில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

திரு. செல்வரட்ணத்தை கடத்தியவர்கள் யார்? கடத்தியதற்கான காரணம் யாது என்பது பற்றி எதுவித தகவலும் இல்லாத போதும் திரு. செல்வரட்ணம் எவ்வித பாதிப்பும் அற்ற முறையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

## மரண அறிவித்தல்

### திருமதி மங்கையற்கரசி இரத்தினசிங்கம்

அராலி கிழக்கு திருமதி மங்கையற்கரசி இரத்தினசிங்கம் காலமாகிவிட்டார். இவர் கம்பு இரத்தினசிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற குணராஜா சிவயோகதேவி, கமல தேவ (நைஜீரியா) நகுலாதேவி, அம்சாதேவி கிஷ்ணராஜா (லண்டன்) ஜெயராஜா (ஜேர்மனி) லோகினிதேவி ஆகியோரின் அன்புத்தாயாரும், கணேந்திரராஜா, திருமதி ராஜேஸ்வரி, கந்தராஜா (நைஜீரியா) கண்ணலிங்கம், ஸ்ரீஸ்கந்தா, மூர்த்தி ஆகியோரின் அன்பு மாமியுமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள் 30-12-86 செவ்வாய்க்கிழமை காலை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக காலை 10 மணியளவில் கோம்பயன் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இரத்தினசிங்கம் குடும்பம்;
32, ஸ்ரான்லிவீதி;

[C6608]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 29-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number R/200/86 ... P. O. Box 49 Telegrams: ... Telephone: 22389—24126

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org